உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 28 ] கீலக - தை - 10—2—69 [ இதழ் 3

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் ! பிஞ்ஞகா ! பிறப்பிலீ !
கொன்றையம் முடியினய் ! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## சிறப்புடைய புராணங்கள்

இன்றைய உலகில் சமயக் கொள்கை இல்லாத இடமே இல்லை என்பது தெளிவானதொன்று. 'சமயம்' என்பது பெரும்பாலும் மெய்ப்பொருள் உண்மைக் கொள்கையையே (ஆத்திகத்தையே) குறிப்பது. மெய்ப்பொருளாவது, என்றும் ஒருபெற்றித்தாய், மாற்றம் இன்றியிருப்பது. அத்தகைய பொருள், 'கடவுள்' என்று சொல்லப்படும் முழுமுதற் பொருளே. எனினும், பிறவற்றை மெய்ப்பொருளாகக் கருதுவோரும் உளர். அது காரணமாக உலகிடைச் சமயங்கள் பல வாயின.

'மாற்றம் இன்றி என்றும் ஒருபெற்றித்தாய் இருப்பதே மெய்ப்பொருள்' எனவே, 'அவ்வாறின்றி, ஒருகணமேனும் ஒருபெற்றித்தாய் நில்லாது மாற்றத்தையே எய்திநிற்கும் பொருள் பொய்ப்பொருள்' என்பது தெளிவாகின்றது. இவ்வாறின்றி, 'மெய்ப்பொருள் என்ருல் உள்ளது' எனவும், 'பொய்ப்பொருள் என்ருல் இல்லது' என்றும் சிலர் பொருள் கூறுவர். முயற்கோடு, ஆகாயத் தாமரை போல்வன 'இல் பொருள்கள்' என்று சொல்லப்படும். முயலும், கோடும் - ஆகாயமும், தாமரையும் தனித்தனி நோக்கும் காலத்து உள் பொருள்களே. அதனுல், இல்பொருள் என்று சொல்லப் படுவன, அவற்ருேடு ஒத்த உள்பொருள்களே வேருெரு வகையாற் கருதும் கருத்தின் குற்றமேயன்றி வேறில்லை என்பது புலனுகும். ஆகவே, 'இல்பொருளுக்கும் முதல், அதனேடொத்த உள்பொருளே' என்பது தேற்றமாதலின், 'பொய்ப்பொருளாவது, முற்றிலும் இல்பொருளே' என்று வாதித்தல் பொருந்தாதாகின்றது.

இனிச் சிலர், 'என்றும் ஒருபெற்றித்தாய் இருப்பதொரு பொருளே இல்லை; உள்ளன பலவும் மாற்றம் எய்தும் பொருள்கள் தாம். மாற்றத்தையே காண்கின்ற நாம், மாற்றம் இல்லாததொரு பொருளைப் பெற விரும்பும் விருப்பத்தினுல், அதனைக் கற்பனை செய்து கொள்ளுகிருேம்; அவ்வளவே. அதனுல், மெய்ப்பொருள் என்று ஒரு பொருள் இல்லை' என்று சாதிப்பர். அவர் சாதனை உண்மையாயின், மெய்ப்பொருட் கொள்கை என்ருே ஒழிந்திருக்க வேண்டும். ஏனெனில், பொய் நீடு நில்லாது. ஒருவன் ஒரு பொருளைச் செம்மையாக உணராது தவருக உணர்வானேயாளுல், அத்தவற்றுணர்வு, பின்பு அவன் அதனைச் செம்மையாக உணருங்காலத்தில் நீங்கிவிடும். அது நிகழ்வதற்குக் காலம் வேண்டுமானுல் சிறிது நீட்டிக்கலாம். ஆயினும், ஒரு பொருளைத் தவருக உணர்ந்தவன், பின்பு அதனைச் செம்மையாக உணர்ந்தேதீர்வான். ஆகையால், தவற்றுணர்வு பொய்யாகலின், பொய் நிலையாதொழிய, மெய்யே என்றும் நிலைபெறுவதாம். இவ்வகையில், 'மெய்ப்பொருள் ஒன்று உண்டு' என்று முதலிற்கருதிய கருத்துப் பிழையுடையதாயின், அக்கருத்தின் வழியே சென்ருேர், முடிவில் ஏமாற்றம் எய்தி, வெறுப்பும், சோர்வும் அடைவர். ஆனுல் நிகழ்ச்சிகள் இதற்கு மாருய் உள்ளன.

'மெய்ப்பொருள் ஒன்று உண்டு' என்று, ஆசிரியர்களாலும், நூல்களாலும், கேட்டுணர்ந்தோர், அக்கேள்வியின் வழியே அதனை அடைய முயன்று அதனைக் கண்டு பேரின்பம் எய்தி, "நான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்" என்று அதன் பெருமைகளையும், அதனை அடையும் வழிவகைகளையும் பல்லாற்றானும், இன்றல்ல; நேற்றல்ல; எல்லை கூற ஒண்ணாத எத்துணையோ காலத்திற்கு முன்பிருந்தே வலியுறுத்தி வருகின்றார்கள். இவர்களது வாய்மொழியைச் செவிக் கொள்ளாதவர் உணர்வு, முதல் உணர்வாய்த் தொடக்க நிலையில் இருப்பதும், மேற்கூறிய ஆன்றோர் உணர்வு, இவர்களது நிலையில் முதலில் நின்று, பின்பு அதனைக் கடந்து முடிநிலையில் சென்ற உணர்வாய் இருப்பதும், அவ்வுணர்வு ஒருவர் இருவரோடன்றி எண்ணிறந்தோர்க்கும், பின்னும் பின்னும் வழிவழியாய் முடிநிலையில் உண்டாகிப் பயன்தந்து வருவதும் கண்கூடு. ஆகவே என்றும் நின்று நிலவிவரும் அவ்வுணர்வு உண்மை யுணர்வேயன்றிக் கற்பனை யுணர்வு அன்று என்பதும், அவ்வுண்மை யுணர்வைக் கற்பனை உணர்வு என்பாரது உணர்வே கற்பனை உணர்வு என்பதும் இனிது விளங்கிக் கிடப்பனவாம். இக் கற்பனை உணர்வு உடையார் பொய்ப் பொருளாகிய உலகத்தையே 'மெய்ப்பொருள்' என்று கொண்டு அதனைச் சரண் அடைவர். அவர் தன்மை அதுவாயினும், 'மெய்ப்பொருள் என்பது ஒன்று இல்லை' என்னும் அவரது வாதமே, அஃது உண்டு என்ற கொள்கை அவர்க்கு முற்பட்டது என்பதனைத் தெளிவாக்கப் போதிய சான்றாகும்.

மெய்ப்பொருள் உண்மைக் கொள்கையாகிய கடவுட் கொள்கையும் பல்வேறு வகையாய்த் தோன்றி வளர்வது. அவ் வளர்ச்சி, ஒவ்வொரு நாட்டில் ஒவ்வொரு வகையாய்க் காணப் படும். நம் பரத கண்டத்தில் அறியப்படும் அவ்வளர்ச்சியில் மிக முற்பட்ட நிலையைக் காட்டுவனவே புராணங்கள். 'புராணம்' என்பதற்கே, 'பழைமை' என்பதுதான் பொருள். புராணங்களில் சொல்லப்படும் வரலாறுகளுட்சில பொருத்தம் இல்லனபோலத் தோன்றினும், யாவும் சில உண்மைகளை அடிநிலையாகக் கொண்டவையேயாம். அவ்வுண்மைகளை மூன்று வகைப்படுத்துக் கூறலாம். ஒன்று, உண்மை நிகழ்ச்சி; மற்றொன்று, மக்கள் தமது கொள்கையை வலியுறுத்தல்; இன்னொன்று, நுண்பொருளைப் பருப்பொருளாக விளக்குதல்.

இவற்றுள் ஒன்று பற்றி வந்த வரலாற்றை இன்னொன்று பற்றி வந்ததாக நினைத்தல் பொருந்தாதாம்.

இவ்வுண்மைகளை அடிநிலையாகக் கொண்டு பழைமையாகவே தோன்றிய வரலாறுகள் நம் நாட்டில் பற்பல. எனினும், அவையனைத்தும் பதினெட்டுப் பெருவரலாற்றில் இடைநிற்கும் வரலாறுகளாக அடக்கிப் பதினெண் புராணங்களாக வகுக்கப்பட்டன. இப்புராணங்களை உணராது நம் நாட்டுச் சமயநிலையை உணர்தல் இயலாது. 'வேதம், ஆகமம்' என்பன நம் நாட்டில் சமய முதல்நூல்களாய் விளங்குகின்றன. எனினும், அவை, கற்றோர்க்கேயன்றி மற்றோர்க்கு உணர இயலாதன. எனவே, புராணங்களே நம் நாடெங்கும் சமய உணர்வைத் தோற்றுவித்து வளர்ப்பனவாகும். வேதாகமங்களை ஓதி உணரும் வாய்ப்பில்லாதவர்கட்கு இவ்வாறு சமய உணர்வைத் தருதல் மட்டுமன்றி தம்மை ஓதி உணர்வார்க்கு வேதாகமங்களின் உண்மைப் பொருளைத் தெளிவிப்பன என்னும் சிறப்பும் புராணங்கட்கு உண்டு. அதனால், வேதாகமங்களை ஓதி உணர்வோரும் புராணங்களை உணர்தல் இன்றியமையாததே. 'வேதங்களையெல்லாம், ஓதாமலே உணர்ந்த வியாச முனிவர், புராணங்களைச் சனற்குமார முனிவரை வழிபட்டுக் கேட்டு உணர்ந்தார்' என்று வரலாறு கூறப்படுகின்றது. இதனால், 'புராணங்கள் எத்துணைச் சிறப்புடையன' என்பது விளங்கும். சித்தாந்த நூல்களில் மிக விரிந்த நூலாய், எல்லாவற்றையும் முற்றக்கூறும் சிவஞான சித்தியார், சித்தாந்தமாகிய மேல் நிலைக்கு உள்ள படிகள் பலவற்றை முறைப்படுத்துக் கூறுமிடத்தில், 'பலவகையாகப் பரந்து விரிந்துகிடக்கும் வேதத்தின் முடிந்த பொருள் இது என்பதை இனிதுணர்தற்குப் புராணங்களை ஓதி உணர்தல் வேண்டும்' என்பது படச் "சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும், வேதச்சிரப்பொருளை மிகத் தெளிந்தும் சென்றால் சைவத் திறத்தடைவர்" எனக்கூறுகின்றது.

"புறச்சமய நெறிநின்றும், அகச்சமயம் புக்கும்,
புகல்மிருதி வழிஉழன்றும், புகலும்ஆச் சிரம
அறத்துறைகள் அவையடைந்தும், அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்,

சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும், வேதச்
சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றால் சைவத்
திறத்தடைவர்; இதிற்சரியை கிரியா யோகம்
செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்"

என்பது அச்செய்யுள். 'புராணங்கள் பதினெட்டு' என்னும் வரையறை தொன்றுதொட்ட மரபு. அதனால், அவற்றுள் 'சில சிறப்புடையன; சில சிறப்பில்லாதன' என்பதில்லை. எல்லாமே சிறப்புடையனதாம். அதனால், 'சிறப்புடைய புராணங்கள்' என்றது, 'மெய்ந்நெறியின் உண்மையைத்தெளிய உணர்த்தும் சிறப்புப் புராணங்கட்கு உண்டு' என்பதை விளக்கியபடியாம். வேதத்தில் பல தெய்வ வழிபாடுகளும், பல தெய்வங்கட்கும் முதன்மையும் கூறப்படுவதால், 'எத் தெய்வம் முழுமுதற்றன்மையுடைய முதற்கடவுள்' என்ற ஐயம் எழும். பதினெண் புராணங்களையும் முற்றநோக்கி உணருமிடத்து அவ்வையம் நீங்க, ஒருதலையான உணர்வு உண்டாவதாகும். ஆகவே, புராணங்கள் சிறப்புடைய பெருநூல்கள் என்பது தெளியப்படுவதாம்.

சைவசமயாசாரியர் நால்வருள் முதல்வராகிய ஞான சம்பந்தர் மதுரையில் சமணர்களுடன் செய்த சமயவாதங்களில் இறுதியாக நிகழ்த்திய புனல்வாதத்தில் வையை யாற்று வெள்ளத்தில் ஏடு எதிர் ஏறிச் செல்வதற்குச் சைவசமய உண்மைகள் பலவற்றையும் வடித்தெடுத்து அருளிச் செய்த திருப்பாசுரத் திருப்பதிகத்தின் திருப்பாடல்களுள் ஒன்றில், 'மெய்ப்பொருள் உணர்வு இனிது விளங்குதற்குப் புராண உணர்வு இன்றியமையாதது' என்று அருளிச்செய்துள்ளார்.

'வேத முதல்வன் முதலே முதலாக விளங்கி வையம்
ஏதப் படாமை உலகத்தவர் ஏத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை என்றே கலிக்கோவை சொல்லே"

என்பது அத்திருப்பாடல். 'சூதமுனிவர் ஏனைய முனிவர் பலர்க்கும் விளங்கச் சொல்லிய பெரும்புகழ்க் கோவையாகிய புராணங்கள் யாவும், 'வேதத்திற்குக் கருத்தா எவனோ அவனது முதன்மையே உண்மை முதன்மை' என்பதை உலகத்தோர் யாவரும் இனிதுணர்ந்து உய்தற்பொருட்டு, யாவரும் துதிக்கப் பூதங்கள் புடைசூழ ஆடும் பெருமானாகிய

சிவபெருமானது முதன்மையை இனிது விளக்க எழுந்தன என்று உணர்ந்து, அவற்றை ஓதி உய்க' என்பது பாட்டின் பொருள். இதனைச் சேக்கிழார்,

"வேத முதல்வன் எனும்மெய்த்திருப் பாட்டி னில்நேர்
ஆதி உலகோர் இடர்நீங்கிட ஏத்த ஆடும்
பாதம் முதலாம் பதினெண்புரா ணங்கள் என்றே
ஓதென் றுரைசெய்தனர் யாவும்ஓ தாது ணர்ந்தார்."

என விளக்கினர். இவற்றால், 'பதினெண் புராணங்கள்' எனத் தொன்றுதொட்டு ஆன்றோரால் போற்றப்பட்டு வரும் புராணங்கள் எத்தகைய சிறப்புடையன என்பது இனிது விளங்கும்.

இத்தகைய புராணங்களை மக்கள் பலர்க்கும் தக்காரைக் கொண்டு இனிது விளக்கத் திருக்கோயில்களில் புராண படன மண்டபங்கள் பல இருந்தன. அவை மக்கட்குப் பத்திப் பெருக்கை மிகப்பெறும் இடங்களாய் விளங்கின. அந்நிலை மாறி, இளைஞர் உள்ளங்களை எவ்வெவ்வகையிலோ ஈர்த்து அலைக்கும் கதையும், பேச்சும் போல்வனவே 'கலை' என உலாவும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில், மேற்கூறிய சிறப்புடைய புராணங்கள் சிறப்புறும் நிலை கனவாகவேனும் சிலரது உள்ளங்களில் காணப்படுமாயின், உய்திக்கு வழிதோன்றுவதாகும்.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Arunajateswaraswami Devasthanam, Tiruppanandal.

On the Arudra Dharisanam Day I had the divine grace of worshiping in this ancient temple at 4 P. M. I found everything divinely perfect in this temple, I had the divine blessing of worshiping Nataraja with his குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயும்.

(Sd) ............

3—1—69. District Munsiff, Valangiman.

## குருவருள்

# அறநெறியும் அருள்நெறியும்

## "துன்பத் தொலைவு"

'இறைவனை வழிபடுதலால் இம்மை, மறுமை, வீடு என்னும் மூவகை யின்பமும் உளவாம்' என்று கூறிய திருவள்ளுவர், 'இறைவனை வழிபடுவார்க்கு எங்கும், என்றும், எந்தவகையான துன்பமும் இல்லை' என்றும் கூறுகின்றார்.

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல"

என்பது அக்குறள். இதனுள், 'யாண்டும்' என்றதற்கு 'எக் காலத்தும்' என்று பரிமேலழகர் பொருள் கூறியுள்ளார். காலத்தைக் குறிக்கவே இடமும் அதன்கண் அடங்குவதாம்.

இவ்வுலகத்தில் நமக்கு வரும் துன்பங்கள் மூவகை வழியினால் வருவனவாம். அவை, 'ஆதியான்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம்' என்பன. அவற்றுள் ஆதியான்மிகத்தை, 'தன்னைப்பற்றி வருவன' என்றும், ஆதிபௌதிகத்தை, 'பிற வுயிரைப்பற்றி வருவன' என்றும் பரிமேலழகர் விளக்கினார். ஆயினும், ஞானாமிர்த நூலுள், 'தன்னைப்பற்றி வருவன, பிற வுயிரைப் பற்றி வருவன' என்னும் இரண்டுமே 'ஆதியான் மிகம்' என்றும், 'ஆதிபௌதிகமாவன, மழை, வெயில், காற்று, இடி முதலியவற்றால் வருவன' என்றும் கூறப்பட்டுள்ளன. 'ஆன்மா, பூதம்' என்னும் சொற்களுக்குப் பரிமேலழகர் கொள் கையில், முறையே, 'தான்' என்பதும், 'உயிர்' என்பதும் பொருள். ஞானாமிர்தக் கொள்கையில் அவற்றிற்கு முறையே, 'உயிர், பஞ்சபூதங்கள்' என்பது பொருள். ஆன்மிகம் - ஆன் மாவால் விளைவது. பௌதிகம் - பூதத்தால் விளைவது.

'ஆதிதைவிகம்' என்பன இவ்வுலகத்தில் ஒருவர்மீதும் குற்றம் சொல்லாது தெய்வத்தையே நொந்துகொள்ளுமாறு விளைவன. அவை, நரை, திரை, மூப்பு, சாக்காடு, வாழ்நாட் குறை, நரகம் முதலியன. பரிமேலழகர் கொள்கையில், ஞானமிர்தத்துள், "ஆதிபௌதிகம்" எனப்பட்டவைகளும் ஆதிதைவிகத்துள் அடங்குவனவாம். உலகில் இம்மூவகையானும் வரும் துன்பங்கள் எண்ணற்றன என்பது தெளிவு. 'இத்துன்பங்கள் யாவும் இறைவனை வழிபடுதலால் நீங்கும்' என்கின்றார் திருவள்ளுவர்.

'பிறப்பு எய்தினோர் பலர்க்கும் மேற்கூறிய மூவகைத் துன்பங்களும் விளைதல் உறுதியாய் இருக்க, இறைவனை வழிபடுவோர்க்குமட்டும் அவை இல்லையாதல் எவ்வாறு' என்று வினவுவார்க்குப் பரிமேலழகர் கூறும் விடை, 'இறைவனை வழிபடுவோர் ஏனையோர்போல உலகப்பற்று உடையவராய் இரார் ஆதலின், அவர் இவ்வுலகில் ஒருபொருளை விரும்புதலும், இன்னொரு பொருளை வெறுத்தலும் இல்லை. விருப்பு வெறுப்புக்களே துன்பத்திற்குக் காரணம் ஆகலின், அவை இல்லையாகவே, அவற்றால் வரும் துன்பங்களும் இலவாம்' என்பது. இதனைக் குறிப்பால் உணர்த்தவே திருவள்ளுவர் இறைவனை இங்கு, 'வேண்டுதல் வேண்டாமை இலான்' என்று குறித்தார் என்பது அவர் கருத்து என்பது, 'அடிசேர்ந்தார்க்கும் அவ்விரண்டும் இன்மையின், அவை காரணமாக வரும் மூவகைத் துன்பங்களும் இலவாயின' என்ற அவரது குறிப்பினால் நன்கு விளங்கும்.

'ஆகாமியம் சஞ்சிதம், பிராரத்தம்' என வினைகள் மூன்று நிலைகளை உடையன. வினைகள் புதியனவாய் அவ்வப்பொழுது செய்யப்படுங் காலத்தில், 'ஆகாமியம்' எனப் பெயர் பெறும். அவையே காலம் வருந்துணையும் பயன் தாராது தங்கிக் கிடக்கும் பொழுது, 'சஞ்சிதம்' எனப் பெயர் பெறும். அவை காலம் வந்தவிடத்து முன்வந்து பயனைத் தரும்பொழுது, 'பிராரத்தம்' எனப் பெயர்பெறும். திருமுறைகளில் ஆகாமியம் 'மேல்வினை' என்றும், சஞ்சிதம், 'தொல்வினை' என்றும், பிராரத்தம், 'ஊழ்வினை' என்றும் சொல்லப்படுதல் காணலாம். இவற்றுள் மேல்வினையாகிய ஆகாமியத்திற்கே விருப்பு வெறுப்புக்கள் காரணமாவனவன்றி, ஊழ்வினையாகிய பிராரத்தத்திற்கு அவை

காரணமாவன அல்ல. ஆதியான்மிகம் முதலிய மூன்றும் பிராரத்தமேயன்றி, ஆகாமியம் அல்ல. ஆகவே, அவை மூன்றும் இல்லாதொழிதல் விருப்பு வெறுப்புக்கள் இன்மையால் ஆவதன்று. 'விருப்பு வெறுப்புக்கள் இன்மையால் துன்பம் நீங்கும்' என்பதாயின், அத்துன்பத்தைப் பிறவி என்னும் துன்பமாக உரைத்தல் வேண்டுமன்றி, பிறவிக்கண்ணே வரும் துன்பமாக உரைத்தல் பொருந்துவதன்றாம். பொருந்தும் எனக் கொள்ளின், 'துன்பம் இல' என்றது, 'துன்ப அனுபவங்கள் இல' என்று கூறியதாய் முடியும். அது கருத்தன்று.

அவ்வாறாயின், 'இறைவனை வழிபடுவார்க்குமட்டும் பிராரத்தம் நீங்குதல் எவ்வாறு' என்னும் வினவிற்கு விடை என்னை எனின், 'இறைவனது திருவருள் அவற்றை விலக்கும்' என்பதே விடை. அங்ஙனமாயின், 'பிராரத்தம் ஒருபோதும் தன் பயனைத் தாராது ஒழியாது' என்பது பொய்யாய் விடுமன்றோ எனின், ஆகாது. ஏனெனில், 'பிராரத்தத்தால் விளையும் துன்பங்களை வன்மையாக அன்றி இறைவன் திருவருள் மிகவும் மென்மையாக்கிவிடும்' என்பதே 'பிராரத்தத்தை விலக்கிவிடும்' என்பதற்குக் கருத்தாகலின்.

நாவுக்கரசரைப் பல்லவ மன்னன் சமணர்களது சொல்லைக் கேட்டுப் பலவகையான துன்பத்திற்கு உள்ளாக்கினமையும், அத்துன்பங்கள் அனைத்தும் கதிரவன்முன் பனிபோல் ஆயினமையும் நன்கறியப்பட்டவை. இவ்வனுபவத்தை அவர் நம்மனோர்க்கு உணர்த்துமிடத்து,

'மலையே வந்து விழினும் மனிதர்காள்
நிலையி னின்று கலங்கப் பெறுதிரேல்
தலைவ னாகிய ஈசன் தமர்களைக்
கொலைசெய் யானை தான் கொன்றிடு கிற்குமே''

என்று அருளுகின்றார்.

இறைவன் திருவருளையே உறுதியாகப் பற்றிநிற்கும் நிலையில் எக்காலும் கலங்காதிருத்தல்வேண்டும் என்பதையே, '' நிலையினின்று கலங்கப் பெறுதிரேல் '' என்றார்.

" நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது "

என்று திருவள்ளுவர் கூறியதும் இதையேயாம்.

'இறைவன் திருவருளால் துன்பங்கள் எளிதில் நீங்குவன வாகும்' என்பதை நாவுக்கரசர்,

" கவனஞ் செய்யும் கனவிடை யூர்தியான்
தமரென் றாலும் கெடும்தடு மாற்றமே "

என்று திருவாய்மலர்ந்தருளுகின்றார். அவர், மேற்கூறியவாறு இறைவன் திருவருளை உறுதியாகப் பற்றிநின்ற காரணத்தால், "அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை" "வானந் துளங்கில் என்! மண்கம்பம் ஆகில் என்" "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" என்று இவ்வாறு பலவிடத்தும் பலபடியாகக் கூறுகின்றார். மாணிக்கவாசகரும், "யாம் ஆர்க்கும் குடியல்லோம்; யாதும் அஞ்சோம்" என்றும், "எங்கெழில் என் ஞாயிறு" என்றும் இன்னோரன்னவாகக் கூறுதலைக் காண்கின்றோம்.

" பொருவ னார்புரி நூலர்
புணர்முலை உமையவ ளோடும்
மருவ னார்மரு வார்பால்
வருவதும் இல்லைநம் அடிகள்;
திருவ னார்பணிந் தேத்தும்
திகழ்திரு வாஞ்சியத் துறையும்
ஒருவ னாரடி யாரை
ஊழ்வினை நலியவொட் டாரே '

என்று சுந்தரர் மிகத் தெளிவாக அருளிச் செய்கின்றார்.

" அச்சமிலர் பாவமிலர் கேடுமிலர் அடியார்
நிச்சமுறு நோயுமிலர் தாமுந்நின்றி யூரில்
நச்சமிட றுடையார்நறுங் கொன்றைநயந் தாளும்
பச்சமுடை யடிகள்திருப் பாதம்பணி வாரே "

என்றாற்போல ஞானசம்பந்தர் அருளிச்செய்யும் இடங்களும் எண்ணில. இவற்றால், 'இறைவனை வழிபடுவார்க்குப் பிராரத்தத்தால் வரும் துன்பங்களும் இல்லையாம்' என்பது இனிது புலப்படும். எனவே, இப்பிறப்பிலும் துன்பமின்றி வாழ்தற்கு இறைவனை வழிபடுதலே தக்கது என்க. இக் கருத்து அப்பூதியடிகள் நாயனார் வரலாற்றில்,

"நம்மையுடை யவர்கழற்கீழ் நயந்ததிருத் தொண்டாலே
இம்மையிலும் பிழைப்பதென என்போல்வா ருந்தெளியச்
செம்மைபுரி திருநாவுக்கரசர்"

என்று தெளிவிக்கப்பட்டமை காண்க.

'இறைவன் தன்னை வழிபடுவார்க்கு இவ்வாறு பிராரத்த வினைத் துன்பத்தை மிக மெலிவித்தும், ஏனையோர்க்கு அவ்வாறு செய்யாது விடுத்தும் நிற்பானாயின், அவன் ஒருபாற் கோடி நிற்கும் கோட்டமுடையனானன்றோ' என்ற ஐயம் எழுதல் இயல்பு. அதனைப் போக்கவே திருவள்ளுவர் மேற்கூறிய குறளில் இறைவனை, "வேண்டுதல் வேண்டாமை இலான்" என்று குறித்தார். அஃதாவது, 'இறைவன் சிலரிடத்து விருப்பும், சிலரிடத்து வெறுப்பும் உடையவனல்லன்; யாவரையும் ஒருபெற்றியே நோக்குபவனே' என்பதாம்.

இறைவன் அத்தகையோனாயின் மேற்கூறியவாறு வேறுபடச் செய்தல் பொருந்துமோ? என்னும் வினாவிற்கு மெய்கண்டார்,

"சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல்
சார்ந்தாரைக் காத்தும் சலமிலனாய்ச் - சார்ந்தடியார்
தாந்தானாச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்தல்
ஆய்ந்தார்முன் செய்வினையும் ஆங்கு"

என்று நல்லதொரு விடையைக் கூறினார். அஃதாவது, 'துன்பத்தைத் துடைத்து இன்பத்தைத் தரவல்ல தலைவன் ஒருவனுக்குத் தன்னைச் சரண் அடைந்தார்க்கே அவ்வாறு செய்தல் கடனாகுமன்றி, ஏனையோர்க்கும் அவ்வாறு செய்தல் கடனாகும் என்று வாதிடுதல் எவ்வாறு பொருந்துவதாகும்? ஆகாது. அதனால், சார்ந்தாரைக் காத்தல்பற்றி அவன் கோட்டம் உடையவனாகான்' என்பதாம்.

"சலமிலன் சங்கரன்; சார்ந்த வர்க்கலால்
நலமிலன் நாடொறும் நல்கு வான்நலன்"

என்று அப்பரும்,

"நலமிலன் நண்ணார்க்கு; நண்ணினர்க்கு நல்லன்;
சலமிலன்; பேர்சங் கரன்"

என்று உமாபதி சிவாசாரியரும் அருளிச்செய்தார்கள்.

எந்த ஒருபொருளின் பயனையும் அதனை அடைந்தால் பெற முடியுமே யன்றி, அப்பொருளையடையாமலே அதன் பயனைப் பெறுதல் எவ்வாறு முடியும்? முடியாது. அதுபோலவே இறைவனால் அடையத்தகும் பயனை அவனை அடைந்தவர் பெறுவரேயன்றி, ஏனையோர் எவ்வாறு பெறுதல் கூடும்? அதனால், துன்பந் தொலைதற்கு இறைவனை வழிபடல்வேண்டும் என்பது, அறநெறியிலும், அருள்நெறியிலும் ஒருவகையாகவே கூறப்படுதலையறிந்து அவ்வாறு செய்து அனைவரும் பயன் பெறுவார்களாக.

---


## "ஞானசம்பந்தம்"

### அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் இதழ்

"ஞானசம்பந்தம்" திங்களிதழ் 26 ஆண்டுகளாகச் சைவமும் தமிழும் பரப்பிவருவது உலகம்அறிந்தது. தற்பொழுதுஇருபத்து எட்டாம் ஆண்டிலும் சமயப்பொருள், இலக்கணம், இலக்கியம் முதலியவற்றுடன் தெளிவான கட்டுரைகளை வெளியிட்டுவருகிறது. இதில் சந்தாதாரர்களாக உள்ளவர்களும், புதிய சந்தாதாரராகச் சேர விரும்புகிறவர்களும் சந்தாத் தொகையைக் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி "ஞானசம்பந்தம்" பெற்றுப் பயன் பெறுவார்களாக.

**ஆண்டுச் சந்தா:- உள்நாடு ரூ. 3—00 வெளிநாடு ரூ. 4—00.**

செயலாளர்: "ஞானசம்பந்தம்" காரியாலயம், தருமை யாதீனம், மாயூரம் அஞ்சல், தஞ்சை மாவட்டம்.

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 27, இதழ் 12, பக்கம் 578 இன் தொடர்ச்சி)

## அபுத்தி பூர்வ - புத்தி பூர்வ சிவபுண்ணியங்கள்

மாணாக்கன்: யோகத்தின்பின்னர் ஞானம் நிகழ்தற்குத் தடையில்லையன்றோ?

ஆசிரியர்: ஆம்! புத்தி பூர்வமான, சிறந்த, உண்மை யோகம் முதிர்ந்த பின்னர் ஞானம் நிகழ்தற்குத் தடை இல்லை.

மாணாக்கன்: அங்ஙனமாயின் இறப்பில் தவங்களாகிய சரியை முதலியன, அபுத்தி பூர்வமாகவும், பொதுவாகவும், உண்மையன்றியும் நிகழ்தல் உண்டோ? உண்டாயின், எவ் வகைச் சிவபுண்ணியங்கள் அபுத்தி பூர்வம்? எவ்வகைச் சிவ புண்ணியங்கள் புத்தி பூர்வம்?

ஆசிரியர்: 'நான் சிவபுண்ணியத்தைச் செய்கின்றேன்' என்ற உணர்வில்லாமலே ஒருவனால் செய்யப்படும் சிவபுண்ணி யம் அபுத்தி பூர்வ சிவபுண்ணியமாகும். எடுத்துக்காட்டாக, சிவாலயம் ஒன்றில் எரிந்துகொண்டிருந்த விளக்கு ஒன்று அணையும் நிலையில் இருக்க, எலி ஒன்று அதில் உள்ள நெய்யை உண்ணச் சென்று வாய்வைத்து, அவ்விளக்குச் சுட்டமையால் வாயை எடுத்தபொழுது விளக்குத் தானாகத் தூண்டப்பட்டு நன்கு எரிந்தது. அதுவே அவ்வெலிக்கு விளக்கிட்ட சிவ புண்ணியமாய் முடிய, அதன் பயனாக அதுவே மாவலிச் சக்கர வர்த்தியாய்ப் பிறந்தது என்ற வரலாறு உணர்க.

மக்களிலும் இதுபோன்ற செயல்களைச் செய்பவர் உளர். கடைத்தெருவில் பூ முதலியன விற்பவர்கட்கு அபுத்தி பூர்வ சிவபுண்ணியம் உண்டாதல் உண்டு. எவ்வாறெனின், பூ விற்றுப் பிழைப்பவர் அதன்பொருட்டுப் பூந்தோட்டங்களை வைத்துப் பாதுகாத்துப் பூப்பறித்துத் தொடுத்து விற்க, அதனைச் சிலர் வாங்கிச் சென்று சிவபிரானுக்குச் சாத்தியும்.

சாத்துவித்தும் வழிபட, அதனால் அப்பூவை விற்றவர்க்கு அவரறியாது அபுத்தி பூர்வ சிவபுண்ணியம் உண்டாகும். விலைக்கு வாங்கும் பூவும், பிறவும் கொண்டு வழிபடுவோர் பொதுச் சிவபுண்ணியம் செய்பவராவர். பூவன்றிப் பிற பொருள்களையும், சிவாலயங்களில் செய்யப்படும் திருப்பணிக்கு உரிய பொருள்களையும் விலைக்கு விற்பவர்கட்கும், கூலி பெற்றுத் திருப்பணி செய்பவர்கட்கும், இவர்போல்வார் பிறர்க்கும் அபுத்தி பூர்வ சிவபுண்ணியங்கள் உண்டாகும்.

இனி, இவ்வாறு பிழைப்பின் பொருட்டன்றி அன்பு காரணமாகவே சிவபெருமானது பணிக்கு மேற்கூறியவாறு உதவினும், அன்றிச் சிவபெருமானைத் தாமே வழிபடினும் அப்பெருமானது முழுமுதற்றன்மையை உணராது, அவனையும் ஏனைத் தேவர்களோடு ஒப்பவைத்து அவற்றைச் செய்வார்க்கு வரும் சிவபுண்ணியம் அபுத்தி பூர்வ சிவபுண்ணியமேயாம். ஏனெனின், 'பதி புண்ணியம்' என்பது பசுக்களது தன்மையினையும், பதியினது தன்மையையும் வேறுபடுத்தி நன்குணர்ந்து, அவ்வுணர்வு காரணமாகப் பசுக்கள் மாட்டு அன்பு நிகழாது, பதியிடத்து அன்பு நிகழப் பெறுதலே யன்றி, வெறும் சொல்லளவினதன்றாகலான் என்க. எவ்வாறாயி னும், இவை முன்னர்க் கூறியனபோலாது சிறிது உணர்வு பெற்றுச் செய்வன ஆகலான், அவற்றினும் இவை சிறிது சிறப்புடையன என உணர்க. இவ்வாற்றால், 'சிவபெருமானது முழுமுதற்றன்மையை உணர்ந்து, அவனுக்குத்தொண்டுபுரிதல் வேண்டும் என்று கருதி, மேற்கூறிய சரியை, கிரியை, யோகங் களைச் செய்தல் புத்தி பூர்வ சிவபுண்ணியமாம்' என்பது, தானே விளங்குதல் காண்க.

## பொது - சிறப்புச் சிவபுண்ணியங்கள்

மாணாக்கன்: 'அபுத்தி பூர்வ சிவபுண்ணியங்கள் இவை' எனவும், 'புத்தி பூர்வ சிவபுண்ணியங்கள் இவை' எனவும் உணர்ந்தேன். இனி, பொதுச் சிவபுண்ணியங்கள் இவை, சிறப்புச் சிவபுண்ணியங்கள் இவை என உணர்த்தியருளல் வேண்டும்.

ஆசிரியர்: புத்தி பூர்வமாகச் செய்யும் சிவபுண்ணியங்களை, நல்லாசிரியரது தீக்கை வகையால் அவற்றைச் செய்யும் தகுதியைப் பெற்று, முறையறிந்து அம்முறைப்படி செய்யின் அவை சிறப்புச் சிவபுண்ணியங்களாம். அவ்வாறின்றித் தாங்களே தங்கட்குத் தோன்றியவாறு செய்யின் பொதுச் சிவ புண்ணியங்களாம்.

தீக்கை பெறாதவர், மந்திரம் இன்றியும், வழிபாட்டிற்குரிய 'ஆசாரம் இவை, அநாசாரம் இவை - முறையாவன இவை, முறையல்லன இவை என அறிதல் இன்றியும் செய்வராகலான், அவர்க்குப் பொதுச் சிவபுண்ணியமும், தீக்கை பெற்றோர் அவற்றையெல்லாம் அறிந்து செய்வராகலான் அவர்க்குச் சிறப்புச் சிவபுண்ணியமும் உளவாம் என்க. இதனால், புத்தி பூர்வ சிவபுண்ணியம், 'பொதுவும், சிறப்பும்' என இருவகைத் தாதல் காண்க.

## உபாய - உண்மைச் சிவபுண்ணியங்கள்

மாணாக்கன் : 'பொதுச் சிவபுண்ணியம், சிறப்புச் சிவ புண்ணியம்' எனக் கூறப்படும் காரணத்தை உணர்ந்தேன். அவற்றுள்ளும், 'உபாயச் சிவபுண்ணியம், உண்மைச் சிவ புண்ணியம்' என்னும் பாகுபாடு எவ்வாற்றால் உண்டாயது?

ஆசிரியர் : தீக்கை பெறுமவேனும், பெற்றேனும் சரியை, கிரியா யோகங்களாகிய சிவபுண்ணியங்களைச் செய்வோர் அனைவரும், அப்பெருமானிடம் கொண்ட அன்பே காரணமாகப் பயன் கருதாது செய்வோர் அல்லர். தம் செயலுக்குப் பயனாகக் கல்வி, செல்வம், வெற்றி, புகழ், மனை, மக்கள் முதலிய உலகப் பயன்களுள் ஒன்றையோ பலவற்றையோ பெறவிரும்பிச் செய் வோரும் பலராவர். அன்னோர் சிவபெருமானிடத்துச் செய்யும் அன்பு, நேரே செல்லும் மெய்யன்பாகாது, தாம் கருதும் பயன் வழியாகச் செல்லும் சார்பு பற்றிய அன்பாம். அச்சார்பு பற்றிய அன்பினால் வரும் சிவபுண்ணியம் பின்பு செய்யப்படும் மெய் யன்பை விளைத்துநிற்குமாகலின், அச்சிவபுண்ணியம் உபாயச் சிவபுண்ணியமாம். தீக்கை பெறுமவேனும், பெற்றேனும் சிவ பெருமானிடத்துக் கொண்ட அன்பே காரணமாக யாதொரு பயனையும் கருதாது செய்யும் சரியை முதலியவைகளே உண்மைச் சிவபுண்ணியங்களாம். ஆகவே, 'பொது, சிறப்பு' என்னும் இரு வகைச் சிவபுண்ணியங்களும் 'உபாயம், உண்மை' எனத் தனித்தனி இரண்டாதல் காண்க.

## சரியையிற் சரியை முதலியன

மாணாக்கன் : சரியை முதலிய சிவபுண்ணியங்கள், அபுத்தி பூர்வ, புத்தி பூர்வங்களாயும், பொது, சிறப்புக்களாயும், உபாய- உண்மைகளாயும் பலவேறு வகைப்படுதலை அறிகின்றேன்.

அவற்றின் வகைகள் பலவும் இவ்வளவினதாமோ? இவற்றிற்கு மேலும் எவையேனும் உளவோ?

ஆசிரியர்: சிவபுண்ணியத்தின் தன்மை வகைகள் இவ்வளவே; ஆயினும், சிவபுண்ணியங்களாகிய சரியை, கிரியை, யோகம் என்பனவும், அவற்றால் விளையும் ஞானமும், 'சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம்' என்றாற்போல ஒன்று நான்காக, நானான்கு பதினாறாய், மேலும் அவ்வாறே எண்ணிறந்தனவாய் விரியும். அதனால் சிவபுண்ணியத்தின் விரிவிற்கும், அவற்றால் விளையும் சிவஞானத்தின் விரிவிற்கும் அளவில்லை என்க.

மாணாக்கன்: அவை அங்ஙனம் அளவில்லனவாயினும், சிலவற்றையேனும் குறித்துக்காட்டி யருளுதல் வேண்டும். அங்ஙனம் காட்டியருளினால், அவையேபற்றி ஏனையவற்றையும் ஒருவாறு உணர்ந்து கொள்ளுதற்கு வாய்ப்பாகும்.

ஆசிரியர்: திருக்கோயிலில் திருவலகிடுதல், பூத்தொடுத்துக் கொடுத்தல் முதலியவை சரியையிற் சரியை. எந்த சிவ மூர்த்தியையேனும் வழிபடுதல் சரியையிற் கிரியை. அம்மூர்த்தியையும், சிவபெருமானையும் தியானித்தல் சரியையில் யோகம். இவற்றால் ஓர் அனுபவத்தைப் பெறுதல் கிரியையில் ஞானம்.

சிவலிங்க பூசைக்கு வேண்டுவனவற்றைத் திரட்டிக்கொள்ளுதல் கிரியையிற் சரியை. புறத்தில் பூசித்தல் கிரியையிற் கிரியை. அகத்தில் பூசித்தல் கிரியையில் யோகம். இவற்றால் ஓர் அனுபவத்தைப் பெறுதல் கிரியையில் ஞானம்

'இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம்' என்னும் நான்கும் யோகத்திற் சரியை. பிரத்தியாகாரமும், தாரணையும் யோகத்திற் கிரியை. தியானம் யோகத்தில் யோகம். சமாதி யோகத்தில் ஞானம்.

ஞானம், 'கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல்' என நான்கு வகையினை உடையது. அந்நான்குமே ஞானத்திற் சரியை முதலிய நான்குமாம்.

இவை பதினாறும் மேலே கூறியவாறு ஒவ்வொன்றும் நான்கு வகைப்பட்டு எண்ணிறந்தனவாய் விரியும் என்று உணர்க.

(தொடரும்)

# " கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

**வித்துவான். திருமதி. ப. நீலா**

( மலர் 28, இதழ் 2, பக்கம் 84 இன் தொடர்ச்சி )

## (11) உக்கிர பாண்டியன் திருவவதாரம்

தண்ணிலா மௌலி சூடிய தனிமுதற் பரம்பொருள் பாண்டிநாட்டு அரசாட்சியினை மண்ணுளோர் மகிழ நடத்து கின்றார். கரியவனும், கமலச்செம்மலும், மறைமுதற்கலைகளுங் காண்டற்கரிய ஈசன், உமையைக் காஞ்சனமாலையின் மகளாக அவதாரம் செய்ய வைத்துத் தானும் அவளுக்கு மருமகனுகி அருளியதோடமையாமல் அக்குலத்திலே இன்னும் எஞ்சியுள்ள குறையொன்றையும் தீர்க்கத் திருவுளங்கொண்டார்.

### குறை தீர்ந்தது - பாண்டியக் குடி தழைத்தது :-

ஒரு காரியத்தைச் செய்தலும், செய்யாதொழிதலும், பிறி தொன்றைச் செய்தலுமாகிய குணமுடையவனும்; நன்மை - தீமை, இகழ்ச்சி - வேட்கை, நட்பு - பகை இவற்றை விளைக்கும் மாயையை இயல்பாகவே வென்றவனுமாகிய பெரியோனின் விந்தைச் செயல்களை யார் விரித்துரைக்க வல்லார்? இந்திர சால வித்தை காட்டும் சித்தனைபோலச் சிவபெருமான் தன் விழியிடைப் பிறந்த வேலவனை, உலகைக் கருவிருந்து பெறுது பெற்ற உமையின் பதிப்பான தடாதகையின் திருவயிற்றிடைத் தோன்றச் செய்தார். பிராட்டியின் தோழியர்களும் அம்மையின் தாய்மைக் கோலங்காண விழைவுற்றனர். திங்கள்தோறும் வளரும் உனது எழிலுக்கேற்ற திருவிழா எடுக்க நாங்கள் விரும்பினேம் என்ற தோழிமார்களின் ஆசை நிறைவேறும் வண்ணம் புனிதை, தாய்மைக் கோலங்கொண்டாள்.

" அங்கவன் வரவுக் கேற்ப ஆயமும் பிறருந் தாழ்ந்து
மங்கையின் வடிவுக் கேற்பக் கருவுரு வனப்புஞ் சீரும்
திங்க(ள்)தோ றுற்று மன்றச் செவ்வியுங் காண ஆசை
பொங்கிய(து) எங்கட்(கு) என்னார் புனிதையப் படிபோ
[லானாள் "

**புன்னகை முகத்தாள் புளிக்கு உவந்தாள் :-**

அருள் கனிந்த மொழியாளின் திருமேனியில் இயற்கை நியதிக் கேற்ப மாற்றங்கள் தெரிந்தன. எளிய அரிய பொருள் களில் ஆசை கொண்டாள். நாவிற்கினிய சுவைகளை நச்சினாள். புண்ணிய முனிவர்களும், வேதபண்டிதர்களும் எண்ணிய சடங் குகளை எல்லாம் வேத விதிப்படி திங்கள்தோறுமியற்றினர். பாண்டிநாடு தான்செய்த தவத்தின் பயனையடையும் திருநாளும் வந்தது. துறவிகளின் மனம்போல வானம் தூய்தாயிருந்த திங்கட்கிழமை - திருவாதிரை கூடிய நன்னாளில் தனிமதிவேணி யரின் தலைவி தாயானாள். சயமகளும், அலை, கலை மாதர்களும் மண்ணுளாரும் மகிழ்ந்து வாழ்த்தினர்.

**குமாரனின் வனப்பும் விளையாட்டும் :-**

புதல்வனுக்குப் பெயரிட விரும்பி சாதகச் செய்திகளை எல்லாம் வேத விதிப்படி குறித்தான். கடலரசனும் வருணன், வரைச்சிறகரிந்த வானவர் தலைவனும் இந்திரன், உலகந்தாங்கும் தெய்வவரைத் தலைவனும் மேருமலை யரசன் ஆகியோரின் செருக் கடங்கச் சினங்கொள்ளும் இளவலுக்குப்பொருத்தமாக 'உக்கிர வர்மன்' - என்ற திருநாமமிட்டான் சுந்தரபாண்டியன்.

" கரியவெண் டிரைநீர்ச் செல்வன் கல்லிற கரிந்த வென்றித்
தெரியல னுலகந் தாங்கு தெய்வத வரைக்கோ னுதித்
தரியலர் வீரஞ் சிந்தத் தருக்கழிக் தச்சந் தோற்றற்
குரியகா ரணத்தா(ல்) நாம(ம்) உக்கிர வருமனென்பார் "

தேவகுருவான வியாழன் சுந்தரபாண்டியரின் உத்திரவிற் கிணங்க குழந்தைக்கு எல்லாக் கலைகளையுங் கற்பித்தார். இயற்கை அறிவால் விளக்கமுற்ற இளவலும் ஒருமுறை கேட்ட போதே உளங்கொண்டான் கலைகளை. பாசுபதப் படைப் பயிற் சியைச் சிவனிடமிருந்து தெரிந்துகொண்டு நாலிரண்டு பிராயத் திற்குள் எண்ணெண் கலைகளும் கைவரப் பெற்றவனாக விளங் கினன்.

யானை, ஆடு, சேவல் இவைகளை இனத்துடன் இணைத்துச் சண்டையிடச்செய்து களிப்பான். யானை, குதிரை யேற்றங் களிலும் பொழுதைச் செலுத்துவான். பதினாறு வயதாயிற்று பாலனுக்கு. இவனே சூர்தடிந்த சுடரிலைவேல் முருகன் என்று வேலும் மயிலும் சூழ்ந்ததுபோல மங்கையரும் அவரது விழி களும் இவரைச் சூழ்ந்துவரத் தொடங்கின. உக்கிரகுமாரனும் நூல்களில் சொல்லப்பட்ட முப்பத்திரண்டு இலக்கணங்களும் பெற்ற காளைப் பருவத்தில் கவினுற்றார்.

உயர்ந்த வயிறு, தோள், நெற்றி, மூக்கினடி, மார்பு கையடியும்; நீண்டகண், கபோலம், கை, மூக்கின்முனை, மார்பும்; சிறுத்திருக்கக்கூடிய குடுமி, தோல், விரலின்கணு, நகம், பல்லும்; குறுகியிருப்பதாகிய கோசம், கணைக்கால், நாக்கு, முதுகும்; அகன்ற தலை, நெற்றியும்; சிவந்துள்ள உள்ளங்கால், உள்ளங் கை, உதடு, கடைக்கண், மேல்வாய், நா, நகம் இவற்றோடும்; வலிமைமிகு மார்பு, ஓசையுடைய கழுத்து, ஆழமுடைய கொப் பூழ் என்பவைகளையும் பெற்று உலகில் யாவருக்கும் மேம்பட்டவ ராக விளங்கினார் இளவரசர். உலகை ஆள இருக்கும் தனய னுக்கு முன்னே மணமுடிப்போம் என்று சுந்தரபாண்டியர் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார்.

## (12) வேல், வளை, செண்டு கொடுத்தது

**மணந்தழைத்த மதுரை :-**

மரபாலும், குடிப்பிறப்பாலும், புகழாலும் பெருமையுற்ற மணவூரையாண்ட சூரியகுல அரசனான சோமசேகரனின் புதல்வி காந்திமதியை அமைச்சர்கள் அனைவரும் ஒருங்கே புகழ்ந்து மணமுடிக்கக் கருத்திசைந்தனர். மதுரை ஆலவாய் இறைவனும் சோமசுந்தரப் பெருமானும் சிறந்த வள்ளலான சோமசேகரன் கனவிடைத் தோன்றி உக்கிரபாண்டியருக்குப் பெண் கொடுக்கும்படித் தூண்டியருளினார். பேருவகையுற்ற சோழமன்னன் அமைச்சரும் மற்றவரும் சூழ்ந்துவர பெண் களின் திலகமாம் காந்திமதியைத் தேரிலேற்றிக்கொண்டு மதுரை நோக்கி வந்தான்

சுந்தரபாண்டியரின் ஏவலை மேற்கொண்ட அமைச்சர்களும் சுற்றத்தவரும் அவர்களை வழியிலே எதிர்கொண்டழைத்து -

எங்கள் இளவரசனுக்கு உங்கள் அரும்பெருஞ் செல்வியான காந்திமதியைத் தந்திடுக - என வேண்டிக்கொண்டனர். அவர்களும் மகிழ்வோடிசைந்து இறைவனது அருளிப்பாட்டையும் எடுத்துரைத்தனர்.

## காந்திமதியின் சிறப்பும் வனப்பும் :-

திருமணநாள் குறித்து அனைவருக்கும் ஓலையனுப்பப்பட்டது. முனிவர், தேவர், அரசர் அனைவருமாக மணத்திற்கு இணைந்து வந்தனர். சீனர், சிங்களர், கொங்கணர், மாளுவர், சாளுவர், சாவகர் போன்ற பிற தேசத்தினரும் வந்திருந்தனர். வேதமுணர்ந்த அந்தணர்கள், சைவ தவ முனிவர்களுடன் இந்திராதி தேவர்களும், திருமாலும் வந்து சுந்தரபாண்டியரின் திருவருள் நோக்கம்பெற்று இருக்கைகளில் அமர்ந்தனர். வியாழ பகவான் காந்திமதியின் சிறப்புக்களை எடுத்தியம்பினர்

உத்தமப் பெண்களுக்குரிய எல்லா இலக்கணங்களும் இவள்பால் பொருந்தியுள்ளன. மணமும் கருமையுங்கொண்ட கூந்தல், யானையின் மத்தகம் போன்ற திரண்டுயர்ந்த தலை, எட்டாம்பிறை போன்ற நெற்றி, அகன்ற அழகிய கண்கள்' கரிய வளைந்த புருவம், எள் மலர் போன்ற மூக்கு, வள்ளைத் தண்டொத்த காது, கண்ணாடி போன்ற கன்னம், சிவந்த இதழ்களுடன் இணையாக அமைந்த பால்நிறப் பற்கள் இவைகளைப் போலவே மற்ற உறுப்புக்களும் எழில் நிரம்பி இவள் விளங்குகிறாள். ஆகவே இந்த எழிலரசியே நம் உக்கிரவர்மருக்கு ஏற்றவள் என்பதை அனைவருமறிய உணர்த்தினர்.

## நறுமணங்கொண்ட திருமணம் :-

சோமசேகரனும் அவன் மனைவியும் உக்கிரகுமாரரையுங் காந்திமதியையும் சிவனும் உமையும் என்றே நினைத்துத் தூநீரால் பாதம் விளக்கி - பாலும் பழமும் அளித்து அருகருகே அமரச்செய்தார்கள். எங்கள் குலக்கொடியாம் இக் காந்திமதியை ஏற்றருள்க என்றுகூறி உக்கிரகுமாரர் கையில் அவளைக் கொடுத்தனர். தேவர்கள் மலர் மழை பொழிந்து வாழ்த்த தேவியின் கழுத்தில் மங்கலநாண் சூட்டினார் உக்கிரகுமாரர். மணங்கொண்ட பின்பு பெண்கள் பலரும் பெருமூச்செறிந்து இரங்கி ஏங்க நகர்வலம் வந்தனர் மணமக்கள்.

**வேல், வளை, செண்டளித்தார் :-**

தேனார் கண்ணித் திருமகனை ஒருநாள் அருகழைத்து புதல்வ! உனக்கு வருணனும், இந்திரனும், மேருமலையரசனும் பகைவர்கள். உன்னிடம் பகைமைகொண்டு அவர்கள் எதிர்க்க வரும்பொழுது வருணனை வேலாலும், இந்திரன் முடியை இந்த வளையாலும், மேருவை இந்தச் செண்டாலும் அடித்து வீழ்த் துக! என்று கூறி மூன்றையும் கொடுத்தான் நிலவணியும் நிர்மலன்.

அரியேறனைய தனயனிடம் ஆட்சிப்பொறுப்பைக்கொடுத்து விட்டுத் தானும் தடாதகையும் பொன்னெடுங் கோயிலுள் புகுந்து மறைந்தான். அவரது அடிக்கமலங்களைத் தாங்கி அரசோச்சுகிறான் உக்கிரவருமன்.

(வளரும்)

## விசேஷ நாட்கள்

### 10—2—69 முதல் 10—3—69 முடிய

14—2—69 பிரதோஷம்

,, ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் கனகாபிஷேகம் கொண்டருளிய திருநாள்

15—2—69 மகாசிவராத்திரி

17—2—69 கோச்செங்கட்சோழ நாயனார் திருநக்ஷத்திரம்

23—2—69 வேளூர்க் கிருத்திகை

1—3—69 பிரதோஷம்

3—3—69 மாசிமகம்

6—3—69 எறிபத்த நாயனார் திருநக்ஷத்திரம்

# திருத்தொண்டர் வரலாறு

திருநெறிச்செம்மல், நல்லிசைப்புலவர்,

வித்துவான். திரு. சா. குருசாமி தேசிகர்.

(மலர் 28, இதழ் 2, பக்கம் 104 இன் தொடர்ச்சி)

## (14) ஆனாய நாயனார் :

" அலைமலிந்த புனல்மங்கை ஆனாயர்க் கடியேன் "

— திருத்தொண்டத்தொகை.

" தாயவன் யாவுக்கும் தாழ்சடை மேற்றனித் திங்கள்வைத்த
தூயவன் பாதம் தொடர்ந்துதொல் சீர்துளை யாற்பரவும்
வேயவன் மேன்மழ நாட்டு விரிபுனல் மங்கலக்கோன்
ஆயவன் ஆனாயன் என்னை உவந்தாண் டருளினனே.

— திருத்தொண்டர் திருவந்தாதி

சோழவள நாட்டில் திருச்சிராப்பள்ளிக்கு அருகில் திருமங்கலம் என்ற ஊரில் ஆயர் குலத்தில் தோன்றியவர் ஆனாய நாயனார். இவர் திருநீற்றினை விரும்பும் திருத்தொண்டில் ஈடுபட்டு முக்கரணங்களாலும் சிவபிரான் திருவடிகளை யன்றி வேறொன்றை விரும்பாதவராய் விளங்கினார். தம் குலத் தொழிலாகிய பசுமந்தைகளைப் புல்வெளிகளுக்கு ஓட்டிச் சென்று மேய்த்துப் பாதுகாத்துவரும் கடமையைப் புரிந்து வந்தார்.

மாடுகளை மேய்ப்பதோடு ஆனாயர் புல்லாங்குழல் வாசிப்பதில் தேர்ந்தவராய் விளங்கினார். இசை நூலிற் கூறிய இலக்கணப்படி எம்பிரானுடைய திருஐந்தெழுத்தினை ஏழிசையின் சுருதிபெற வாசித்து இசைபரப்பி மகிழும் இயல்புடையராயிருந்தார். அவரது இன்னிசைகேட்டு இயங்கியற்பொருள்களும் நிலையியற் பொருள்களும் தம்வசம் இழந்து நிற்கும்.

### ஆனயரின் இசைப்பணி

ஆனயர் ஒருநாள் தமது திருமுடியில் கண்ணி சூடி திருநீற்றினை நிறையப்பூசி முல்லைமாலை அணிந்து கையில் வெண்கோலும் வேய்ங்குழலும் எடுத்துக்கொண்டு தம் ஏவல்கேட்கும் இடையர் பலரோடு பசுக்களை மேய்க்கக் கானகம் சென்றார். அப்போது கார்காலம். கொன்றை மரங்கள் மாலைபோல பொன்மலர்ச் சரங்களைத் தொங்கவிட்டுக்கொண்டு பூத்துக் குலுங்கின. கொன்றைக்காய்கள் நீண்ட சடைபோல நிலம் நோக்கிக்கொண்டிருந்தது. அம்மரத்தைக் கண்ட ஆனயர் கொன்றைமலர் சூடி விரித்த சடைமுடியோடு சிவபிரான் விளங்குவதைப்போல எண்ணினார். அன்பின் பெருக்கில் ஆனயர் கேட்போர் என்பெலாம் கரைந்துருகுமாறு வேய்ங்குழலில் இன்னிசை எழுப்பினார். திருவைந்தெழுத்தை உள்ளுறையாக அமைத்து இசைமழை பொழிந்தார். இசைநூலில் விதித்த இலக்கணப்படி பண்ணென்ற இசையெழுப்பிப் பரவசமடைந்து நின்றார்.

ஆனயரின் இன்னிசை கேட்ட பசுக்கள் மேய்ச்சலை மறந்து அவரைச் சூழ்ந்து நின்றன. தாயின் மடியில் பால் சுவைக்கும் பச்சிளங் கன்றுகள் பாலுண்ணுவதை மறந்து நின்றன. மான்முதலிய விலங்குகள் மெய்சிலிர்த்து உருகி நின்றன. மயில்கள் ஆடலை மறந்தன. நாகர், மலையரமகளிர் விஞ்சையர், சாரணர் முதலிய தேவர்கள் அவரைச் சூழ்ந்து இசையின்பத்தில் ஈடுபட்டு மயங்கி நின்றனர்.

கிளிகட்கு உணவூட்டிய தெய்வப்பெண்கள் அக்கினியோடு ஆனயர் அருகேவந்து நின்றனர். பகைவர் பகைமைமறந்து நண்பர்களாக மாறினர். பாம்பும் மயிலும் பகை மறந்தன. சீயமும் யானையும் சேர்ந்து மகிழ்ந்தன. புலியும் புல்வாயும் நட்புக்கொண்டன. காற்று அசையாமல் நின்றது. மரக்கிளைகள் அசைவின்றியிருந்தன. ஆறுகளும் அருவிகளும் ஆராவாரம் தவிர்ந்தன.

### அருட்காட்சி

இவ்வாறு அசையும் பொருள்களும் அசையாப் பொருள்களும் இசையில் ஈடுபட்டுப் புலனும் கரணமும் ஒன்றாய் நிற்க

ஆனாயர் இசைத்த குழலிசை சிவபிரான் திருச்செவிகளில் சென்று நிறைந்தது. இறைவன் உமையம்மையோடு எழுந்தருளிவந்து ஆனாயர் முன்னின்று அருட்காட்சி வழங்கி 'நம்பால் அன்புகொண்ட அடியார்கள் உன் குழலிசைகேட்டு மகிழும் வண்ணம் நம்மை வந்தடைவாயாக' எனத் திருவாய் மலர்ந்து அருள்செய்தார்.

" ஆனாயர் குழலோசை கேட்டருளி அருட்கருணை
தானாய திருவுள்ளம் உடையதவ வல்லியுடன்
கானாதி காரணராம் கண்ணுதலார் விடையுகைத்து
வானாறு வந்தணைந்தார் மதிநாறும் சடைதாழ. "

இறைவன் திருவாணைப்படி ஆனாயர் இன்னிசை பாடிக்கொண்டே பொன்னம்பலத்தை அடைந்து தேவர்கள் மலர் மழை பொழியவும், முனிவர்கள் மறைமொழிகளால் துதிக்கவும் இறைவன் திருவடிநிழலில் இன்புற்று இருந்தருளினார்.


## குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச் செய்யவும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா :- ரூ. 3—00

விலாசம் :— நிர்வாக ஆசிரியர்.

உயர்திருவாளர், T. M. குமரகுருபரன் பிள்ளை
B. A., B. L., அவர்கள்
குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்.

# குரு

வேதாந்த சிரோமணி,

## பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள்

( மலர் 28, இதழ் 2, பக்கம் 96 இன் தொடர்ச்சி )

வானர ராஜனுகிய சுக்கிரீவன் மனைவி ருமா என்பவளின் தந்தை தாரன் என்ற வானரம் பிரஹஸ்பதியின் அம்சமாகப் பிறந்தான் என்று இராமாயணம் கூறும்.

ஜ்யோதிஷத்தில்:- பொன்னிறமானவர். பொன்னிறமான வஸ்திரம், குடை, கொடி, ரதம் உடையவர். வடக்கு முகமாக பத்மாஸனத்தில் இருப்பவர். நான்கு கைகளையுடையவர். தனுஸ், மீனம் இரு ராசிகளுக்கும் அதிபதி; சிந்துதேசாதிபதி. நீண்ட சதுரமான மண்டலத்தில் கொண்டைக்கடலை தான்யத்தில் வீற்றிருப்பவர். கடகத்தில் உச்சன். மகரத்தில் நீசன். புதன், சுக்கிரன் சத்ரு. சூரியன், சந்திரன், கேது மித்ரர்கள். அரச சமித்தும் முல்லைப் புஷ்பமும் இவருக்குப் பிரியமானவை. இந்திரன் அதிதேவதை. பிர்மா பிரத்யதி தேவதை. இவருக்கு உரிய உலோகம் பொன். புனர்பூசம், விசாகம், பூரட்டாதி நக்ஷத்திரங்களில் பிறந்தவர்களுக்கு முதலில் இவருடைய தசை 16 ஆண்டுகள் ஆகும். 2, 5, 7, 9, 11 இவ்விடங்களில் குரு இருப்பின் நல்ல பலன்கள் உண்டு. கோசார ரீதியாக எல்லா கிரஹங்களுக்கும் அதிசார, வக்ர காலங்களில் அந்தந்த ராசியின் பலன் இவருக்கு மட்டும் முந்தின ராசி பலனே. பூச நக்ஷத்திரத்திற்கு அதிதேவதை பிரஹஸ்பதி. ஆகவே தைப்பூசம் வியாழக்கிழமை வரின் குருபுஷ்யம் என சிறப்பாகக் கூறப்படும். ஸ்காந்த புராணத்திலுள்ள அஷ்டோத்தர சதநாமாவிலும் அங்கிரஸ் வர்ஷம் பிறந்தவர் என்றும் (அங்கிரோவர்ஷ ஸம்ஜாதாய நம) நான்கு கையுடையவர் என்றும் (சதுர்புஜாய நம:) வில் அம்பு தரித்தவர் என்றும், (தனுர்பாணதராய நம:) தக்ஷிணாயனத்தில் பிறந்தவர் என்றும், (தக்ஷிணாயனஸம்பவாய நம;) தெரிகிறது. எனினும் நவக்கிரஹ ஆராதனக்கிரமம் என்ற நூலில் சௌம்ய வருஷம் த்வாதசி அவிட்ட நக்ஷத்திரத்தில்

பிறந்தவர் என்று கூறப்பட்டிருக்கிறது. வாயு புராணம் உபோத் காத பாதம் ஐம்பத்து மூன்றுவது சர்க்கத்தில் உத்தர நக்ஷத்திரத்தில் பிறந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. கல்ப பேதத்தினுல் யாவும் பொருத்த முடையனவே.

பிர்ம வைவர்த்த புராணத்தில் பிரஹஸ்பதி கவசஸ்தோத்திரம் உள்ளது. அங்கு "தப்தகாஞ்சன ஸங்காசம் சதுர்புஜ சமன்விதம், தண்டாக்ஷஸூத்ரஹஸ்தம் ச கமண்டலுவரான் விதம்" என்ற தியானத்தால் நான்கு கைகளில் தண்டம், ஜப மாலை, கமண்டலு, வரதமுத்திரை இருக்கின்றன என்று தெரிகிறது. மந்திரத்திற்குரிய தியானத்திலும் அவைகளே கூறப்படுகின்றன. (வராக்ஷமாலிகா தண்ட கமண்டுலுதரம் விபும்) விஷ்ணுதர்மோத்தரத்தில்

ப்ருஹஸ்பதி. ஸுராசார்யோ தயாவான் சுபலக்ஷண:
லோகத்ரயகுரு; ச்ரீமான் ஸர்வஞ்ஞ: ஸர்வகோவித:
ஸர்வேச: ஸர்வாதீபிஷ்ட: ஸர்வஜித் ஸர்வபூஜித:
அக்ரோதனே முனிச்ரேஷ்ட: நீதிகர்த்தா குரு: பிதா
விச்வாத்மா விச்வ கர்த்தா ச விச்வயோனிரயோனிஜ:
பூர்புவஸ்ஸ்வ: ப்ரபுச்சைவ பர்த்தா சைவ மஹாபல:

இந்த இருபத்தினன்கு காமங்களையும் காலையில் எழுந்து படிப்பவர்களுக்கு குரு கிரகத்தினுல் பீடை உண்டாகாது. ஆயிரம் கோதானம் செய்த பலன் கிட்டும். நெடுநாள் வாழ்வு உண்டாகும் என்று பலன் கூறப்படுகிறது. குருகாயத்ரி வருமாறு :- ஆங்கிரஸாய வித்மஹே ஸுராசார்யாய தீமஹி - தன்னே குரு: ப்ரசோதயாத்வேதாசார்யாய வித்மஹே ஞானப்ரதாய தீமஹி தன்ன ஆர்ய: ப்ரசோதயாத் என்றும் உள்ளது.

தற்காலம் ஜ்யோதிடர்கள் வியாழன் கிரகம் ஒருவனுக்கு தீமை செய்வதாக ஜாதகத்தில தோன்றினுல் தக்ஷிணமூர்த்திக்கு அர்ச்சனை செய். அபிஷேகம் செய் என்று பரிகாரம் கூறுகின்றனர். தக்ஷிணமூர்த்திக்கும் பிரஹஸ்பதிக்கும் என்ன தொடர்போ. குரு என்ற பெயர் இருவருக்கும் இருப்பதே காரணம்போலும். பொருள் வசதியுடையவர் கிரஹங்களுக்கு அபிஷேக அருச்சனை செய்து பரிகாரம் காணலாம். இல்லாதவர் மந்திரஜபம் செய்யலாம். ஸ்தோத்திரங்களைப் படிக்கலாம். குருசம்பந்தமான தசாபுக்தி தோஷங்களுக்கும் பரிகாரமாக உமாசம்ஹிதையில் கூறிய இராமாயண பாராயணமுறை வருமாறு :-

நவக்கிரகங்களின் தசாபுக்தி தோஷபரிகாரங்களாக ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் சில சர்க்கங்களைப் பாராயணம் செய்ய வேண்டும். சில இடங்களில் சிறப்பான நிவேதனப் பொருள் களும் முறைகளும் உண்டு. பொதுவாக குரு தசாதோஷ பரிகார மாக ஹனுமான் சமுத்திரம் தாண்டியதைக் கூறும் சுந்தர காண்டம் முதல் சர்க்கத்தைப் பாராயணம் செய்து சர்க்கரை கலந்த பொரியை ஹனுமானுக்கு நிவேதிக்க வேண்டும்.

## குருதசையில் புத்திதோஷ பரிஹாரம்

1 சூரிய புக்திக்கு. சுக்ரீவன் வானரர்களுக்கு வழி சொல்லிக் கொடுத்த சர்க்கம் (கிஷ்-40)

2 சந்திர புக்திக்கு சம்பாதிக்கு இறகு முளைத்த சர்க்கம் (கிஷ். 60 முதம் 63 முடிய)

3 செவ்வாய் புக்திக்கு அயோத்யா புரவர்ணன சர்க்கம் (பால-5)

4 புத புக்திக்கு தேவர்கள் திருமாலைத் துதிக்கும் சர்க்கங்கள் (பால-15, 16)

5 குரு புக்திக்கு சரபங்க முனிவருக்கு மோக்ஷம் கொடுத்த சர்க்கம் (ஆரண்-5)தை இரு சந்தியாகாலத்திலும்.

6 சுக்ர புக்திக்கு பாலகாண்டம் 77-ஆவது சர்க்கம்.

7 சனி புக்திக்கு, பட்டாபிஷேகத்திற்காக இராமனை அழைக்கச் சென்ற சுமந்திரர் ராமனைத் தரிசித்த சர்க்கம் (அயோ-16)

8 ராகு புக்திக்கு சபரீமோக்ஷ சர்க்கம் (ஆர-74)

9 கேது புக்திக்கு வானரர்கள் மதுவனமழித்த சர்க்கங்கள் (சுந்த-61, 62)

மற்ற கிரகங்களின் தசையில் குரு புத்தியினால் உண்டாகும் தோஷங்களுக்குப் பரிகாரம் வருமாறு.

சூரிய தசையில் அயோத்யா காண்டம் 17-ஆவது சர்க்கம். சந்திர தசையில் நாரதர் வால்மீகிக்கு உபதேசித்த பாலகாண் டம் முதல் சர்க்கம். செவ்வாய் தசையில். ஹனுமான் இராவண னுக்கு உபதேசம் செய்த சுந்தரகாண்டம் 51-ஆவது சர்க்கம்.

ராகு தசையில் சுக்ரீவ ராஜ்யாபிஷேக சர்க்கம். (கிஷ்கி-26) சனி தசையில் ராமர் பக்தனான ஹனுமாரை ஆலிங்கனம் செய்து கொண்ட யுத்தகாண்ட முதல் சர்க்கம். புத தசையில் பரதன் சொன்ன காமதேனுவின் சரித சர்க்கம் (அயோ-74). கேது தசையில், ஹனுமான் சீதையிடம் ராமனின் வெற்றியைக்கூறும் சர்க்கம் (யுத்த-116). சுக்ர தசையில் தசரதனுடைய அச்வமேத சர்க்கம் (பால-16).

இவ்விதம் எல்லா தசைகளுக்கும், யாவற்றிலும் எல்லா கிரகங்களுடைய புக்திக்கும் பரிகாரம் கூறப்பட்டிருப்பினும், குருவைப்பற்றியவை மட்டும் கூறப்பட்டன. முதலில் தசாநாதனுக்குக் கூறிய சர்க்கத்தையும், பிறகு புக்திநாதனுக்கு கூறிய சர்க்கத்தையும் பாராயணம் செய்யவேண்டும். காலம் கூறப் படாவிடில் முற்பகலும், சிறப்பாக நிவேதனப்பொருள் சொல்லப் படாத விடத்தில், தேங்காய், வாழைப்பழம், திராக்ஷைப்பழம் இவையும் கொள்ளத்தக்கன. அந்த, அந்த கிரகங்களுக்குப் பிரியமான நிவேதனமும் செய்தல்வேண்டும். இவ்விதமாக, சக்திக்கும், தகுதிக்கும் ஏற்றபடி பரிகாரங்களைச்செய்து தீமையன்றி நல்வாழ்வு அடைவோமாக.

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பேராயி ரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமுந் தந்திரமு மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கினேனே. — அப்பர்.

திருச்சிற்றம்பலம்

# முக்கோடி வாழ்நாள்

## திரு. R. வேலாயுத ஓதுவார்.

இவ்வுலகிடை இலங்கையை ஆண்ட மன்னன் இராவணன். இவன் சகல கலைகளையும் கற்றறிந்த வல்லோன். எவராலும் பெறற்கரிய நலங்கள் அனைத்தையும் தருவது சிவன் அருளே என உணர்ந்தான். கயிலை சார்ந்தான்; கடும் தவம் புரிந்தான். சிவனைப் பூசித்து வழிபட்டான். மகிழ்ந்த சிவனிடத்துத் தேரோடு வாள், பேரோடு மூன்று கோடி வாழ்நாள் ஆகிய வரங்களைப் பெற்ருன். இவன், வாழ்நாள் பெற்றது பற்றி ஒரு கர்ண பரம்பரைக் கதை வழங்குகிறது.

'இராவணன் சிவபெருமானை நோக்கித் தவம் செய்து மூன்றரைக் கோடி வாழ்நாள் பெற்ருன். இதைக்கண்டு அஞ்சிய தேவர்கள், திருமாலிடம் சென்று, முறையிட்டனர். கேட்ட திருமால் 'அஞ்சற்க, நாம் வகை புரிவோம்' என்று கூறி, ஒரு வயோதிகப் பிராமண வடிவம் கொண்டார். இராவணன், இலங்கை நோக்கி வரும் வழியில், ஒரு பாழுந் திடலையும் கிணற்றையும் தோற்றுவித்தார். அத்திடலில், பல குழிகளை உண்டாக்கினுர். அக்குழிகளில் பல துளசிச் செடிகளைத் தலை கீழாக நட்டார். ஒரு ஓட்டைக் குடங் கொண்டு அப்பாழுங்கிணற்றில் நீர்மொண்டு அச்செடிகளில், உடல்சோரப் பெருமூச்சு எழ ஊற்றிக்கொண்டிருந்தார். வரும் வழியில், இச்செயல் கண்ட இராவணன், நீண்டநேரம் பார்த்து நின்று வியப்புற்ருன்.

கிழப்பிராமணனை நோக்கி 'யாரையா நீர்; இப்படிச் செய்து கொண்டிருக்கிறீர்' என்று பலமுறை கேட்டுப் பரிகசித்துச் சிரித்தான். இவ்வளவு செய்தும், தன்னை மதியாது, தன் செயலிலேயே நின்ற அந்தணன்மேல் இராவணன், சினங் கொண்டு, ஏ...மூடா, நில், என்று கத்தினுன். சப்தம் ஓங்கியது கண்ட அவர் 'ஏ... இராவணு நீ பெரிய புத்திசாலி, நீ விரும்பிப் பெற்ற மூன்றரைக்கோடி வாழ்நாளை நாலு கோடியாகப்

பெறத் தெரியாமல் அரைக்கோடி, குறைவாகப் பெற்று வந்துள்ளாய். இதை அறியாத நீ, என்னைச் சொல்ல வந்து விட்டாய்' என்று கூறினர். அது கேட்டுத் திகைத்தான். அந்தணன் சொல்லைக்கேட்டு மனம் மாறி மீண்டும் கயிலை சென்றான். 'சிவனே ; வரம் தந்த நீர்! ஏன் இப்படி அரைக் கோடியைக் குறைத்துத் தந்தீர், இது தகுமா, இனி எனக்கு அரைக்கோடி வாழ்நாள் வேண்டும்' என்று கேட்டான். கேட்ட சிவனர்; நீ விரும்பியபடி அரைக்கோடி தந்தோம் என்று அருளிட மகிழ்ந்தான். மூன்றரைக்கோடி, அரைக்கோடி ஆனதைக் கண்டு தேவர்கள் மகிழ்ந்தனர் என்பது அக்கதை' ஆயினும், இராவணன், மூன்று கோடி வாழ்நாள் பெற்றே வாழ்ந்தான் என்பது! திருஞானசம்பந்தர் திருவாக்கு.

இவ் விராவணன் சீதாபிராட்டியாரைக் கவர்ந்து செல்லும் போது, அவனைப் புண்படும்படிப் போர் புரிந்து, அவன் ஆற்றலை அழித்த புள்ளரசனகிய சடாயுவும், சிவனைப் பூசித்தே இராவணனையும் வெல்லும்படியான, ஆற்றல் பெற்றுப் பின் வீடு பேறுற்றான். இவற்றுலெல்லாம்; சிவபெருமான்; பண் ணென்ற இசைபாடித் தன்னை வழிபடும் அடியார்க்கு, நீண்ட வாழ்நாளும், பேராற்றலும், இம்மண்ணுலகோடு விண்ணுலக ஆட்சியும், அருளுவான் என்பது விளங்குகிறது. இதனைத் திருஞானசம்பந்தர் அருளிய புள்ளிருக்கு வேளூர்த் தேவாரம் நமக்கு நன்கு உணர்த்துகிறது.

பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டன் மருவுமிடம்
எண்ணின்றி முக்கோடி வாழ்நாள துடையானைப்
புண்ணென்றப் பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே.

இப்பாடலின் முதல் இருவரிகளுள், அருளும் உண்மையை; புள்ளிருக்கு வேளூரில் வந்து வழிபட்ட குமரகுருபர முனிவரும், ஸ்ரீ செல்வமுத்துக்குமாரப் பெருமானைப் போற்றிய பிள்ளைத் தமிழ் கொண்டு தந்தையைப் போலவே தானும் தன்னை வழி படும் அடியார்க்கு இவ்வுலகோடு எவ்வுலகு வேண்டினும் தந்து பின் அழியாத வீடும் தரும் செல்வனய்த் திகழ்கின்றான் என்று போற்றியுள்ளார். புள்ளிருக்கு வேளூர்ப் புனிதனைப் போற்று வோர், நீண்ட ஆயுள் குன்றாத வலிமை, நீங்காத செல்வம், அழியாத வீடு இவற்றைப் பெற்று வாழ்வர் என்பது, திண்ணம்.

# "எங்குற்றாய் - இங்குற்றேன்!"

செஞ்சொற்கொண்டல், வித்துவான்

**திரு. சொ. சிங்காரவேலன்** M. A., Dip. Ling.

## திருநேரிசை

"அங்கத்தை மண்ணுக் காக்கி ஆர்வத்தை உனக்கே தந்து
பங்கத்தைப் போக மாற்றிப் பாவித்தேன் பரமா நின்னைச்
சங்கொத்த மேனிச் செல்வா சாதல்நாள் நாயேன் உன்னை
எங்குற்றாய் என்ற போதால் இங்குற்றேன் என்கண்டாயே"

என்பது அப்பரடிகளது திருநேரிசைகளுள் ஒன்று.[1] இதன்கண் வரும் 'எங்குற்றாய்?' என்ற வினாச் சொற்றொடரும், 'இங்குற்றேன்' என்ற விடைச் சொற்றொடரும் ஆழ்ந்து சிந்தித்துணர வேண்டிய ஒட்பம் உடையவை. அப்பரடிகள் தம் இறுதி நாளிலும், தம்மைக் கைவிடாது காத்தல் வேண்டும் என்று இறைவனை வேண்டிக் கொள்ளும் கவிதைகள் பல உண்டு. அவை அகம் கரைய வேண்டும் குழைவானவை. அவற்றில் வரும் மெய்ம்மைகள் மனித வாழ்வில் சிந்தித்துத் தெளிதற்குரிய சிறப்புடையவை.

### மரணம் தவிர்க்கவியலாதது :

மரணம் தவிர்க்கவியலாததொன்று; வேறு எதனைத் தவிர்ப்பினும் தவிர்த்திடலாம்; இறப்பினைத் தவிர்த்திடவியலாது. பெருஞ் செல்வமும், நீடிய பதவிகளும், உயர் பெரும் பேறுகளும் எல்லாம் முடிவில் ஒருநாள் கூட வாராமற் போகின்றன. செய்த நல்வினை தீவினைக்கு ஈடாகவே இவை யனைத்தும் வந்து சேர்கின்றன; விட்டும் பிரிகின்றன. இவையனைத்தையும் விட்டு நீக்குவதும், இவற்றோடு தொடர்புறுத்துவதும் அவரவர் செய்த வினைக்கே என்றாலும், அவ்வினைகள் செய்தாரைத் தாமே சென்று சேரும் அறிவில்லாதவை. ஆதலால், அவற்றைப் பொருத்து

---

[1] திருநாவுக்கரசர் தேவாரம் - (சமாதிப் பதிப்பு - 1941) - 75 - 8.

பவன் எல்லாம் வல்ல இறைவனே; அவனே 'சேர்ப்பான்' என்று சிறப்பிக்கப்பெறுவன் என்று சைவ சித்தாந்த சாத்திரங்கள் பேசும்.[2]

## ஏட்டின்படியென்று இரு :

கூட்டுவதும் கூட்டிப் பிரிப்பதுவும், ஆட்டுவதும், ஆட்டி அடக்குவதும், காட்டுவதும் காட்டி மறைப்பதுவும் ஆகிய பல அருஞ்செயல்களைச் செய்யும் இறைவன் விளைக்கீடாகவே அவற்றைச் செய்தருள்வன். தமிழகம் செய்த தவப்பேற்றால், தோன்றியருளிய அருட்பெருஞ் சான்றோராகிய குருஞானசம்பந்தர் இதனையே 'கண்ணுதலோன் முன்னமைத்த ஏட்டின் படியென்று இரு' என்று அறிவுறுத்துகின்றார்.[3] இந்த உணர்வு, நிலையாமை உடைய உலகில் தேறித் தெளிந்து நிலைத்தனவே செய்தல் வேண்டும் என்ற தெளிவு, மனித உள்ளத்தில் உண்டாதல் வேண்டும்; அது வாராதவரையில் எல்லாம் பகட்டே; வீணே; பாழே.

அவ்வுணர்வு எப்போதும் உள்ளத்தில் நிலைத்திருக்குமாயின் நல்லனவே கூற, நல்லனவே எண்ண, நல்லனவே செய்ய முயற்சி தலைப்படும். அம்முயற்சி அழியாத பேரின்பத்தைத் தலைப்படுவிக்கும். அப்பரடிகள் இக்கருத்தை அறிவுறுத்தும் இடங்கள் பல. அவற்றுள் ஒன்றே இங்குக்காட்டிய திருப்பாட்டு.

## பாட்டு விளக்கம் :

இத்திருப்பாட்டு அடிகளது வேண்டுகோள் ஒன்றை விழுமிய முறையில் விளக்குகின்றது. 'ஒருநாள் என் வாழ்வும் முடிந்திடும் என்று உணர்கின்றேன். மேலானவனே! அப்போது என் பொய்யான உடல் அழிந்திடும். தெளிவாகக் கூறலுற்றால், என் அங்கங்கள், உடலுறுப்புக்கள் மண்ணுள் வீழ்ந்து மண்ணாகும். என்னுடைய ஆர்வம், உன்பால் நான் கொண்ட உள்ளன்பு உன்னிடத்தேவரும். என்னுடைய குற்றங்கள் அனைத்தும் என்னளவேயாய்க் கழிந்தொழியும். நான் உன்னருளால் எல்லாம் தூயனாய் விளங்கி உன்னையே பாவித்திருப்பேன். ஒளி வடிவாக - சங்கு போன்று வெண்மையாய் வீற்றிருக்கும் அருள்

---

[2] பெரிய புராணம் - (சமாசப் பதிப்பு - 1950) - 3645.

[3] சிவபோகசாரம் - (தருமையாதீனப் பதிப்பு - 1936) - 103.

திருமேனி உடைய நீ. அப்போது என் ஓலக்குரலுக்குச் செவி சாய்த்தருள வேண்டும். 'எங்கு உள்ளாய்' என்று நான் குரல் கொடுக்கும் அவ்விறுதிநாளில், அவ்வேளையில், 'இங்கு உள்ளோன்' என்று கூறி என் முன்னின்று அருள்வாயாக' என்று கூறுவது அடிகள் திருவுள்ளம். 'அங்கத்தை மண்ணுக்கு' என்பதால் பொல்லாத புலால் உடம்பு இறுதியில் மண்ணோடு மண்ணுவதே என்பதை விளக்கும் அடிகள், 'சங்கொத்த மேனி' என்பதால் இறைவனது ஒளியுடல் அருள் உடலாய்ப் பேரொளி வீசுவது என்றும் குறிப்பிக்கின்றார் எனலாம். இங்கே உயிர் தன் முயற்சியெல்லாம் இழந்து, உலக இன்பங்கள் அனைத்தையும் துறந்து, 'எல்லாம் பொய்' என்று நீக்கி, இறைவன் ஒருவனே மெய் என்ற உணர்வு தலைப்பட்டு, அதனைக் கூடி இன்புறும் குறிப்போடு 'எங்கே உள்ளான்' என்ற நல்லுணர்வு மேவும். அந்தக் குரலுக்கு என்றே காத்திருக்கும் இறைவன் 'இங்கே உள்ளேன்' என்று சொல்லியபடியே ஓடோடி வந்து ஆரத்தழுவி அச்சம் தவிர்ப்பான் என்று தாயனைய கருணையைக் கற்பனை செய்து, உலகிற்கு உண்மை உணர்த்துகின்றார் அடிகள். அதற்கு அளப்பருங் கருணையை மறவாது இறுதி நாளிலும் குறிக்கொண்டால் உய்வு உண்டு என்று அறிவுறுத்துவது அவரது கருத்தாகும். இவ்வாறே பாலருவாயரும், 'புலன் ஐந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி அறிவழிந்திட்டு ஐம்மேல் உந்தி அலமந்த போது' 'அஞ்சேல்' என்று கூறி வந்து ஆட்கொள்ளக் கூடியவன் இறைவன் ஒருவனே என்ற உண்மையைத் திருவையாற்றில் உலகிற்கு வழங்கியுள்ளார்.[4]

## முழுப் பதிகம் ஒன்று :

கூற்றுவன் வருங்கால் என்னைக் காத்தருள வேண்டும் என்று குறிப்பிடுவதாக ஒரு திருப்பதிகம் முழுவதுமே அப்பர் திருவாக்கில் அமைந்துள்ளமையும் இங்குக் கருதத்தக்கது.[5]

## என்னை மறக்கப்பெருய் :

மற்றோரிடத்தில் நயமாக இக்கருத்தை அடிகள் விளக்குகின்றார். மேலுலகு, இவ்வுலகு, கீழுலகு ஆகிய மூன்றுலகங்

---

[4] திருஞானசம்பந்தர் தேவாரம் - (சமாசப் பதிப்பு - 1931) 1 - 130 - 1.

[5] திருநாவுக்கரசர் தேவாரம் - 95.

கட்கும் நீயே அம்மையாகவும் அப்பனுகவும் இருக்கின்றாய்; செம் மேனி எம்மானுக - செம்பொருளாக - அழல் வண்ணனுக உள்ள நீயே இவ்வாறு மூவுலகங்கட்கும் முதல்வன் என்று நான் உனக்கு முன்னே கூறினல் அது முகமன் மொழியாக - உபசார மொழியாக அமைந்தாலும் அமைந்துவிடும். அது கருதி அந்த உண்மையை நான் கூருது இரேன். ஏனெனில் அதுவே உண்மை. நீ எனக்கொரு வரம் தரல் வேண்டும்.

இறப்பு என்னை ஒருநாள் நிச்சயமாகத் தழுவும்; மெலி வொடு மூப்பு வந்து கோலனுகத் திரிவதனுலேயே அஃது எனக்குத் தெளிவாகத் தெரிகின்றது. அப்படி இறக்கும்போது, உன்னை நினைத்தபடியே என் ஆவி நீங்கும். அவ்வாறு பொய் யான என் உடலைவிட்டுப் புறப்பட்டபிறகாவது, என் உயிரை மறக்கப்பெருது அருள் வழங்கிக் காப்பாயாக; இதுவே உன்னை நான் வேண்டுவதாகும் என்று கூறி முடிக்கின்ற, நயச்சிறப்பும், உருக்கக் குழைவும் உடைய அந்நறுங் கவிதை இது:[6]

"முன்னே உரைத்தால் முகமனே ஒக்கும்இம் மூவுலகுக்கு
அன்னையும் அத்தனும் ஆவாய் அழல்வண நீயிலையோ
உன்னை நினைந்தே கழியுமென் ஆவி கழிந்ததற்பின்
என்னை மறக்கப் பெருயெம் பிரான்உன்னை வேண்டியதே."

மறக்கினும் குறிக்கோள் :

இவ்வாறு கூறும் அடிகளுக்குத் தம்முயிர்மீது நம்பிக்கையும் இல்லை. 'உன்னை நினைந்தே என் ஆவி அழியும்' என்றவர், ஒருவேளை தன் சிறுமையால் அது மறத்தலும் கூடும் என்று எண்ணுகின்றார். அப்படி மறந்தாலும் என்னை மன்னித்துக் குறிக்கொண்டு காப்பது உன் பெருங் கருணைக்கு அழகு என்று கூற முற்படுகின்றார்; முன்னே சுட்டப்பட்ட அப் பதிகம் இவ்வாறு நினைப்பிக்கின்ற தொடர்களை உடையது.[7]

"தென்திசைக்கே உந்திடும்போது மறக்கினும்
என்னைக் குறிக் கொண்மினே"

"மெய்யிற் கையொடு கால் குலைக்கின்று
நும்மை மறக்கினும் என்னைக் குறிக்கொண்மினே"

---

[6] திருநாவுக்கரசர் தேவாரம் - 112 - 3.
[7] ,, - 95 ( - 2, 3)

" விக்கி யஞ்செழுத்தும் ஒத்தொழிந்து உம்மை
மறக்கினும் என்னைக் குறிக்கொண்மினே " *

" இறக்க நமன்தமர் கோட்பட்டு நும்மை
மறக்கினும் என்னைக் குறிக்கொண்மினே "

" வெங்கூற்றம் கண்டு உம்மை மறக்கினும்
என்னைக் குறிக்கொண்மினே "

" பிறவிச் சுழிப்பட்டு நும்மை மறக்கினும்
என்னைக் குறிக்கொண்மினே "

" நமன்தமர்தம் கொள்ளையிற் பட்டு மறக்கினும்
என்னைக் குறிக்கொண்மினே "

இவ்வாறெல்லாம் அப்பதிகத்துட் பன்முறையும் உருகி உருகி வேண்டுகின்றார் அடிகள்.

## தொடர் அமைப்பழகு :

இவ்வாறெல்லாம் ஆங்காங்கு உரைக்கின்ற இவ்வருளாசிரியர், 'எங்குற்றாய்' 'இங்குற்றேன்' என்ற தொடர்களை நாடகச் சுவைபட மெய்ப்பாட்டுடன் அமைக்கின்ற அழகும், அவை அவ்வாறு தக்க இடத்திற் பொருந்தி யமைக்கப்பட்டுப் பயில்வோர் உள்ளங்களைக் குழைவிக்கும் பெற்றியும் ஓதி ஓதி அநுபவிக்கப்படவேண்டியவை என்று கூறலாம்.

## தொடர்பான சிந்தனைகள் பிற :

இறுதிநாள் வந்துற்றால் மனிதர் யாராலும் என்ன செய்து அதனைத் தவிர்த்திடமுடியும்? ஒன்றாலும் மாற்றவியலாது. அவர்கள் செய்வதெல்லாம் சிறு தொழிலே. 'ஐத்தானத்து அகமிடறு சுற்றி ஆங்கே அகத்தடைத்தால் யாதொன்றும் இடுவார் இல்லை' [8] 'ஐயினால் மிடறு அடைப்புண்டு ஆக்கை விட்டு ஆவியார் போவதுமே, அகத்தார் கூடி, மையினாற் கண் எழுதி மாலை சூட்டி மயானத்தில்' இடுவர். [9] 'சிறு விறகால் தீமூட்டிப் பின்னே செல்லாநிற்பர்' பிறரெல்லாம். [10] இந்த

---

* திருநாவுக்கரசர் தேவாரம் - 95 (4, 5, 7, 8, 9).

8 திருநாவுக்கரசர் தேவாரம் - 306 - 2.

9 ,, - 274 - 4.

10 ,, - 275 - 1.

உடலை இறைவன் போற்றிப் பாதுகாத்து வருகின்றான்; 'இந் நாள்வரை இவ்வுயிர் இருத்தற்குரிய கூடு இது. அதுவரை இஃது இதனுள் இருத்தலும், துயரம் அநுபவித்தலும் வேண் டும்' என்று வினைக்கீடாக விதியிட்டுப் பேணிவருகின்றான். 'என்று அவன் கைவிட்டு விடுகின்றானோ அப்போது இந்த உடல் பாடு திண்டாட்டமே. முன் கூறியபடியே ஊர் மக்களால் வெறுத்தொதுக்கப்படும் பண்டமாக இஃது ஆகிவிடும்' என்ற பொருள்பட மற்றோரிடத்தில் அப்பரடிகள், 'கடலின் நஞ்சு அமுது உண்டவர் கைவிட்டால், உடலினார் கிடந்து ஊர் முனி பண்டமே' என்று அறிவுறுத்துகின்றார்.[11]

'மறப்பன்கொலோ' :

இவ்வாறெல்லாம் உலக மாந்தர்க்கு உரைப்பாராக, தம்மீது வைத்தும் உலக மாந்தர்மீது வைத்தும் உண்மைகளை உரைக் கின்ற திருநாவுக்கரசர்க்கு, இறுதிநாள் வந்து, பின்னே பிறக்கும் நாள் வினையால் வரும்போது தம்முயிர் இறைவனை எண்ணி டுமோ எண்ணாதோ என்ற ஐயவுணர்வும் ஒரொருகால் ஏற்பட்ட துண்டு. 'மறத்தலும் கூடும்' என்று முன்னே கூறிய மன நிலைக்கும். 'மறப்பேனோ மாட்டேனோ' என்ற மனநிலைக்கும் பெரிதும் வேறுபாடு உண்டு. முன்னது ஒருவகையான் தெளிந் தது; பின்னது தெளிவு வாராத - ஒருபாற்படாத - ஐயநிலை; இதனை உடையவராய் அடிகள் பாடுவதாகவே பின்வரும் இடத் தைக் கொள்ளவேண்டியுள்ளது.[12]

" பிறந்தால் பிறையணி வார்சடைப் பிஞ்ஞகன் பேர்
மறப்பன் கொலோ என்றென் னுள்ளம் கிடந்து மறுகிடுமே."

இங்ஙனம் இப்பிறவிக்காக மட்டுமன்றி அடுத்து ஒரு பிறப்பு உண்டாமாயின் அதற்காகவும் ஏங்கும் ஏக்கம் அடிகளின் பாடல் களிற் காணப்பெறுகின்றது.

பிறவியும் இன்பமே :

இவ்வாறு எடுத்த பிறவியில் இறைவனை மறவாத பெரும் பேற்றினை உயிர் பெற்றிடுமாயின் அத்தகைய பேறு பெறற்கரி யது என்று அந்தப் பிறவியை வாழ்த்தவும், எடுத்து ஏத்தவும், அடிகள் தவறிலர்.

---

[11] திருநாவுக்கரசர் தேவாரம் - 203 - 4.
[12] ,, - 113 - 8.

"காணப்பெற்ருல் மனித்தப் பிறவியும் வேண்டுவதே"[13]

"வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி மதித்திடுமின்
தில்லையம்பலத்துக்
கூத்தனுக் காட்பட் டிருப்பதன்ரே நந்தம்
கூழைமையே"[14]

"குறைவிலோம் கொடுமா நுட வாழ்க்கையால்
......இறைவன் நீள்கழல் ஏத்தியிருக்கிலே"[15]

'துன்பம் தரும் பிறவியும், இறைவனை ஏத்தி வழிபடப்பெறும் உணர்வும் உறுதியும் வாய்க்கப்பெற்ருல் இன்பம் தருவ தொன்றே' என்று செம்மாந்து பேசும் சிவநெறியினை இவ் விடங்களில், 'வாக்கின் மன்னவனர்' வற்புறுத்தினர் என்று கொள்ளல்வேண்டும்.

'எங்குற்ருய் இங்குற்றேன்' என்ற தொடர்களையொட்டிய அடிகளின் சிந்தனைச் சுடர்களை இவ்வாறு அவரது அருங்கவி தைகள் பலவற்றுள்ளும் காணலாம்.

### வரலாற்று நினைவும் சாயலும் :

திருப்பூந்துருத்தியை அணுகிய நிலையில் திருஞானசம்பந்தர் இவர்ந்து வந்த பல்லக்கினை அடியாரோடு அடியாராய்ச் சுமந்து வந்த அப்பரடிகள், 'எங்குற்ருர் அப்பர்' என்ற பாலருவாயர் பரிவுமொழி கேட்டு, 'உம்மடிகள் தாங்கிவரும் பெருவாழ்வு பெற்று இங்குற்றேன்' என்று தன்னடக்கம் ததும்ப மொழிந்ததும், துணுக்குற்று இறங்கித் திருஞானக் குழவியார் பணிந்து தழுவி யதும் சேக்கிழார் தரும் செய்திகள்.[16] ஆங்கும் - 'எங்குற்ருய் - இங்குற்றேன்' என்ற தொடர்களை, வேறு நிலையில் கண்டு

---

[13] திருநாவுக்கரசர் தேவாரம் - 81 - 4.

[14] ,, - 81 - 5.

[15] ,, - 152 - 5.

[16] "திருஞான மாமுனிவர் அரசிருந்த திருப்பூந்துருத்திக்கு அருகாக எழுந்தருளி 'எங்குற்ருர் அப்பர்' என உருகா நின்று' உம் அடியேன் உம்மடிகள் தாங்கிவரும் பெருவாழ்வுவந்தெய்தப் பெற்று இங்குற்றேன் என்ருர்" - பெரிய புராணம் - 1666 (சமாசப் பதிப்பு - 1950).

இன்புறலாம். 'எங்குற்றாய்' என்று ஏங்கும் உயிர், இங்குற்றேன் என்று அதனைத் தாங்கி நிற்கும் இறைவனை அறியக் காலம் வருதல் வேண்டும் என்ற குறிப்பும் இங்கே காணலாம். 'ஈசன் அடியில் இருக்கையிலே எங்கெங்கும் ஈசன் அடி தேடி இளைத்தேனே' என்ற குருஞானசம்பந்தர் வாக்கும்[17] இங்கு ஒப்பிட்டுணரத்தக்கது. இந்த வரலாற்று நிகழ்ச்சி தம் திருவுள்ளத்தே தோன்ற, அந்நிலையில் 'அங்கத்தை மண்ணுக் காக்கி' என்ற திருநேரிசை பாடப்பட்டிருந்தால், தமக்கும் திருஞானசம்பந்தர்க்கும் நிகழ்ந்த அவ்வுரையாடலின் சாயலையே இப்பாட்டில் வேறு வகையில் அகநெக்குருக அமைத்தனர் அடிகள் என்றும் கூறலாம். இத்திருப்பாட்டு நாள்தோறும் ஓதப்பெற்றுவரின் நல்லருள் கூட்டும் நற்றுணையாக அஃது அமையும் எனலாம்.

---

[17] சிவபோகசாரம் - தருமையாதீனப் பதிப்பு (1936) - 48.

---

## கந்த புராணத் திரட்டு

தருமையாதீன வெளியீடு:- முருகப் பெருமானின் அருள் வரலாற்றை விளக்கும் நூல் கந்த புராணம். முப்பெரும் புராணங்களில் சிவபிரானின் நெற்றிக்கண் போல சிறந்து விளங்குவது இந்நூல். கந்த புராணத்தில் இல்லாதது எந்தப் புராணத்திலும் இல்லை என்னும் பழமொழி இந்நூலின் தனிச் சிறப்பை விளக்கும். கச்சியப்ப சிவாசாரியர் பதினாயிரத்திற்கு மேற்பட்ட செய்யுட்களால் இந்நூலைச் செய்தருளினர். இந்நூல் முழுவதையும் ஓதி யுணர்தல் சிலருக்கே இயல்வதாகும். சுருக்கமாக இருந்தால் இந்நூலை எல்லோரும் எளிதில் படித்துப் பயன் பெறுவர். நூல் வரலாறு எஞ்சாதபடி கந்த புராணத் திரட்டு என்ற பெயரில் இந்நூல் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் திருவுளக் குறிப்பின் வண்ணம் வெளிவந்துள்ளது. தருமையாதீனக் கல்லூரிப் பேராசிரியர், மகாவித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் கந்த புராணத்தில் இன்றியமையாத பாடல்களாக உள்ளவற்றுள், 1420 பாடல்களைத் திரட்டி, இடையிடையே கதைப் பகுதிகளையும் சுருக்கித் தந்துள்ளார்கள். சமய உலகிற்கு இந்நூல் பெரிதும் பயன்படும்.

அமைப்பு டிம்மி 1 x 8. பக்கங்கள் 277. விலை ரு. 2—00. பதிவு அஞ்சற் செலவு ரு. 1—95. கிடைக்குமிடம்:- காஷியர், தருமை ஆதீனம், தருமபுரம், மாயூரம் P. O.

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான்,
சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

( மலர் 28, இதழ் 2, பக்கம் 92 இன் தொடர்ச்சி )

மேலும் ஸகர்ப்பமாகவுள்ள சிலை கூடாது அதைக் காண்பது எப்படி எனில், கல்லை உளியினால் சிற்பி உடைக்கும்போது அதில் ஒருமண்டலம் காணப்பட்டு அந்த மண்டலம் மஞ்சள் வர்ணமாக இருந்தால் அதனுள் தேரை இருப்பதாக உணர வேண்டும். ஹரிதாளவர்ணமாக இருந்தால் நண்டு இருக்கும் என்றும், கபிலவர்ணமாயின் மூஷிகம் இருக்கும் என்றும் பல வர்ணமாக இருப்பின் தேள் இருக்கும் என்றும் உணரவேண்டும்.

இவ்வாறு வெளிப்படையான லக்ஷணம் காணப்படாவிடின் சில மருந்துகளை அரைத்து அக் கல்லின்மேல் பூசிப்பார்த்து அந்தப் பூச்சு உலராமலிருந்தால் அதில் விஷமிருப்பதாக உணர்ந்து அந்தக் கல்லைக் கையினாலும் தொடக்கூடாது என்று காரணாகமம் கூறுகிறது. அதாவது

मुस्तकं करवीरं च कुष्ठं मांसी फलत्रयम् ।
एतानि पेषयित्वा तु स्त्रीस्तन्येन पेषयेत् ॥
अश्मानं लेपयेत्तेन यदि चिलिचिलो भवेत् ।
कालकूटविषं तत्र नतु हस्तेन संस्पृशेत् ॥

—காரணாகமம்.

கோரைக்கிழங்கு, அரளிவேர், கோஷ்டம், ஜடாமஞ்சி, ஏலக்காய், தானிக்காய், மாசிக்காய் இவைகளைத் தாய்பாலில் அரைத்து கல்லில் பூசிவைத்தால் அது காயாமல் தழதழவென்று காணப்பட்டால் அந்தக்கல்லில் காலகூடவிஷமிருப்பதாக அறிந்து அந்தக் கல்லைக் கையினாலும் தொடக்கூடாது. என்பன போன்ற பல மருந்துகள் சிலா சோதனத்திற்குச் சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம்.

இலிங்கம் செய்வதற்கு :

मनोरमा शिलाग्राह्या यौवनाश्रेयसे मताः ।

—காமிகம்·

மனோகரமாயும் யௌவனமாயுமுள்ள சிலையை க்ரஹிக்க வேண்டும். இது சிரேயசைக் கொடுக்கும். அதில் ஆட்யம், அனட்யம், சுரேட்யம் சர்வசமம் என நான்குவிதமாகும்.

நாலுவித லிங்கங்களுக்கும் மேலே ருத்ரபாகம் விருத்த மாகவும் அல்லது 16 மூலையாகவும், அல்லது 32 மூலையாகவும் அல்லது 8 மூலையாகவும் அல்லது 64 மூலையாகவும் இருக்கலாம் பிரும்மபாகம் அடியில் நாலு மூலையாகவும், விஷ்ணு பாகம் நடுவில் எட்டு மூலையாகவும் இருக்கும். பிரும்மபாகம் நபும்ஸகம் விஷ்ணு பாகம் ஸ்திரீலிங்கம். ருத்ரபாகம் புல்லிங்கம் என்று அறிக. 4 மூலை, 8 மூலை, விருத்தம் என்பது நாலுவித லிங்கங்களுக்கும் சமம். இந்த லிங்கம், ஸமகண்டம், வர்த்தமானம்· சைவாதிக்யம், த்ரிராசிகம் என நான்குவிதமாகும்

சமகண்டம் என்ற இலிங்கமானது "ஸர்வதச்சமம்" என்று கூறப்படுவதால் சிவபாகம் விட்ணுபாகம் உருத்ரபாகம் யாவும் சமமாக இருக்கும்.

வர்த்தமான இலிங்கம் என்பது 4, 5, 6 என்றும் 5, 6, 7 என்றும் பிரும்மபாகத்தைவிட விஷ்ணுபாகமும் இதைவிட உருத்ரபாகமும் ஒவ்வொரு பங்கு அதிகமாக இருக்கும்.

சைவாதிக்யம் என்ற இலிங்கமானது, 7, 7, 8 பாகம். 4, 4, 5 என்று பிரமவிஷ்ணு பாகம் சமமாகவும். உருத்ரபாகம் அதிகமாகவும் காணப்படும்.

த்ரைராசிகலிங்கமோவெனில் இலிங்கத்தின் உயரத்தை ஒன்பது பாகம் செய்து ஒவ்வொரு பந்தத்திலும் மூன்று பாக மாகும். 6, 7, 8 பாகம் விசாலமும் வர்த்துளாஇருதியிலும் அஷ்டாச்ரத்திலும் சதுரச்ரத்திலும் ஆகும்.

இதுபோல் தாராலிங்கம் ஸஹஸ்ரலிங்கம், முகலிங்கம் இவைகளுடைய விதியையும் காமிகாகமம் லிங்கலக்ஷணவிதி படலம் விஸ்தாரமாகக் கூறுகிறது.

பாணலிங்கம் :

பொதுவாக இலிங்கம்:- சுவாயம்புவம், தேவிகம், திவ்யம், மாநுஷம், ராக்ஷஸம் ஆர்ஷம், பாணலிங்கம் என பூஜா ஏழு விதமாகும். அதில் பாணலிங்கம் என்பது,

वाणं लिङ्गमधिष्ठितेशमनिशं माषादि हस्तांतकम्
जंबूपक्वफलोपमं मधुनिभं भृङ्गप्रभं काचभम् ।
नीलं वा प्रतिबिंब वद्धरितभं तद्वर्णपीठं ककुप्
तुल्यं गोस्तन कुक्कुटाण्डसदृशं स्निग्धं सदार्च्यं श्रियै ॥

— சித்தாந்தசாராவளி.

பாணலிங்கமானது எப்பொழுதும் ஈச்வரனால் அதிக்கப்பட்டிருப்பதால் மிகவும் உயர்ந்தது. இது உளுந்து அளவுள்ளதுமுதல் ஒருமுழ அளவுள்ளது வரையில் காணப்படுகிறது. நாவற்பழம் போன்ற வர்ணமுடையதாயும், தேன்வர்ணமுடையதாயும், வண்டு போன்ற நிறமுடையதாயும், கசுக்கல் போன்றதாயும் நீலவர்ணமுடையதாயும், பச்சைவர்ணமுடையதாயும், திக் பாலகர்களுடைய வர்ணம்போன்றவைகளாயும், பசுவின் முலைக்காம்பு போன்றதாயும், கோழிமுட்டைபோன்ற வடிவமுடையதாயும், மழமழப்பாயும் இருக்கிற பாணலிங்கம், போகம் மோக்ஷம் இரண்டையும் தரும்.

பாணம் எந்த வர்ணமோ அந்த வர்ணத்தில் பீடமிருக்க வேண்டும். பாணலோஹாதி லிங்கங்களுக்கு பிண்டிகை விஸ்தாரம் லிங்கவிஸ்தாரத்திற்குச் சமமாக விருக்கவேண்டும்.

கடினமான பாணலிங்கத்தைப் பூஜித்தால் புத்ரதார நாசமுண்டாகும், நடுவில் வெண்மையான ரேகை விழுந்திருக்கும். பாணலிங்கத்தைப் பூஜித்தால் க்ருஹபங்கம் உண்டாகும், ஒரு பக்கம் கருத்திருந்தால் பசு புத்ரன் தனம் இவைகளுக்கு அழிவு. சிரசு பிளந்திருந்தால் வியாதியும் மரணமும் உண்டாகும். ஈனஜாதிகள் தொட்டதாக இருந்தால் ஸகல அவயவத்திற்கு அழிவு. லேசாயும் கபிலமாயும் ஸ்தூலமாயிருப்பதை க்ரஹஸ்தன் ஒரு போதும் பூஜிக்கக்கூடாது. முனை கூராயும் மிகவும் கருப்பாயுமிருப்பது கூடாது. இவைகள் யாவும் கிருஹஸ்தவிஷயம். முமுக்ஷுக்களுக்கு நல்லது.

लयं गच्छन्ति भूतानि संहारे निखिलानिच ।
तेन लिङ्गमिति प्रोक्तं सूक्ष्मत्वाल्लिङ्ग मुच्यते ॥

— கிரணாகமம்.

ஸம்ஹாரகாலத்தில் உலகமெல்லாம் இதனிடத்தில் ஒடுங்குவதாலும், இது சூக்ஷ்மமாக இருத்தலாலும் லிங்கம் எனப்பெயர் பெறும். மற்றும்

लिङ्गे सर्वं समुत्पन्नं लयस्तत्रैव चेच्यते ।
सृष्टि संहार एवोक्तं लिङ्गनामाऽस्य चोदितम ॥

—வாதுளம்.

இலிங்கத்திலிருந்து யாவுமுண்டாயிற்று. ஒடுக்கமும் இதனிடத்திலேயே உண்டாகிறது. இவ்வாறு சிருஷ்டியும் சங்காரமும் கூறப்படுவதால் இதற்கு லிங்கம் என்ற பெயர் கூறப்படுகிறது என்று வாதுளாகமம் கூறுகிறது.

பொதுவாக இலிங்கத்திற்கு பீடம் அமைக்கவேண்டியதற்கு இலக்கணம்.

लिङ्ग नाहसम पीठविस्तरं विस्तरस्य शरवेद तुङ्गकम ।
तुङ्गकार्धसम गोमुखान्तकं गोमुखान्तसम कण्ठ नाहकम ॥

இலிங்கத்தின் சுற்றளவு பீடத்தின் மேல்பரப்பு ஆகும். அந்த அளவை ஐந்துபங்கு செய்து அதன் நான்கு பங்கு பீடத்தின் உயர அளவு. அதில் பாதி அளவு, கோமுகத்தின் நீளம். அந்த கோமுக அளவிற்குச் சரியாக கண்டத்தின் அளவு என்று கணக்கிட்டு பீடத்தைச் செய்யவேண்டும்.

ஐந்து வயதுள்ள லக்ஷணமான பெண்குழந்தையை நன்முக அலங்காரம் செய்து அக்குழந்தையைக்கொண்டு பாணத்தைத் தொடச்செய்தால் அக்குழந்தை தொடும் பாகமே முகபாகமாகக் கொள்ளவேண்டும். இது பாணலிங்க விஷயம்.

லிங்கபாகம் அளவைவிட அதிகமாக இருந்தால் ம்ருத்யு. சக்திபாகம் அதிகமாக இருந்தால் தனநாசம். இலிங்கம் பீடம் இரண்டும் சரியாகவிருந்தால் போகம் மோக்ஷம் என ரௌரவாகமம் கூறுகிறது.

[ தொடரும் ]

# கேடிலி

**சி. அ.**

வாழ்க்கையில் குறைபல உடையோர், குறையில்லாத வாழ்வை உடையவரைத் தமக்கு உதவி செய்யுமாறு நாடிச் செல்லுதல் இயல்பு. ஆயினும், குறை ஒன்றேனும் இல்லாத - நிறைவான வாழ்க்கை யுடையோர் உலகத்தில் ஒருவரும் இலர். ஒருவருக்கு உள்ள குறைகளோடு மற்றவர்களுக்கு உள்ள குறைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அக்குறைகள் ஒரே அளவில் இல்லாது, ஏற்றக் குறைவு உடையனவாய் இருக்கும். அவ்வளவே யன்றிக் குறையே யில்லாத வாழ்க்கை யுடையவர் ஒருவரும் இல்லை.

சில குறைகளை யுடையவர், பல குறைகளை உடையவருக்குச் சில வகைகளில் உதவுதல் கூடும். ஆயினும், அவ்வாறு உதவ முன்வருபவர் எத்துணைப் பேர்? மிக மிக அரியர். அரிதில் முன் வந்து பிறருக்கு உதவி செய்பவரும், எத்துணைப் பேர்க்கு, எந்த அளவில், எவ்வளவு காலத்திற்கு உதவி செய்தல் கூடும்? சிலருக்குச் சிறிதளவில், சில நாட்களுக்குத்தான் உதவி செய்தல் கூடும். ஏனெனில், அவர்கள் பெற்றுள்ள பொருளும், உடல் வலிமையும், உடம்பும், பிறவும் எல்லாம் ஓர் அளவிற்கு உட்பட்டனவேயன்றி, அளவில்லாமல் விரிந்து பரந்து கிடக்கவில்லை. ஆயினும், உதவி வேண்டுவோர் எப்பொழுதும் அதனை வேண்டியே நிற்கின்றனர். ஆகவே, எவ்வகையாலும், என்றும், எங்கும் முன்வந்து உதவ வல்ல பேரருளாளனாகிய வள்ளல் ஒருவன் இருப்பானாயின் - அவனும் நமது வருகையை எதிர் நோக்கியே நிற்பானாயின், அவனை அறியாது அகன்ற நாட்களும், அறிந்தும் அடையாது நின்ற நாட்களும் அவமே ஒழிந்த நாட்கள் அல்லவோ? இதனை நினைந்து இரக்கங் கொள்கின்றார், வீட்டிற்கு வாயில் எனும் தொடை சாத்து சொல்வேந்தராகிய அப்பர்.

பொங்கு கடல் கல்மிதப்பில் போந்தேறிய பெருமையுடைய வராகிய இவர் மூவாண்டிலே சிவஞானம் பெற்ற ஆளுடைய பிள்ளையாரைக் காண விரும்பித் தில்லையை விட்டுச் சீகாழியை

யடைந்து அவரால் மகிழ்ந்து வரவேற்கப் பெற்று அளவளாவி யிருந்து பின் திருக்கோலக்காவில் விடை கொண்டு பல தலங்களையும் வணங்கிச் செல்கின்றவர், திருப்புள்ளிருக்கு வேளூரை (வைத்தீசுவரன் கோயிலை) அடைந்து வணங்கிப் பவரோக வைத்தியநாதனுய் உள்ள பெருமானது பெருமைகள் பலவற்றையும் நினைந்து நினைந்து உருகி, 'இப்பெருமானை அடையும் பேறில்லாது மிகப் பல நாட்களை வீணே கழித்து விட்டேனே' என்னும் கழிவிரக்கத்தால் "ஆண்டானை அடியேனை ஆளாக் கொண்டு" என்று தொடங்கும் அரிய திருத்தாண்டகத் திருப்பதிகத்தை அருளிச் செய்தார். அதன் முதல் திருப்பாட்டிலே தான், 'எவ்வுயிர்க்கும், என்றும், எங்கும் இருந்து உதவுபவன் இப் பெருமான் ஒருவனேயன்றோ' என்னும் திருவுள்ளத்தால், அவனது பெருமைகள் பலவற்றுள், எஞ்ஞான்றும் கேடின்றி நிலைபெறும் அவனது நித்தத் தன்மையை எடுத்தோதியருளினர்.

குறைவிலா நிறைவாய் இருப்பவன் இறைவன் ஒருவனே. உயிர்கள் அனைத்தும் குறையுடையனவே. அதனுல் எல்லா உயிர்களும் இறைவனை இன்றியமையாதனவே. அவ்வாற்ருல் இறைவன் இயற்கையிலே தலைவனுயும், உயிர்கள் இயற்கையிலே அவனுக்கு அடிமைகளாயும் இருக்கும் நிலை உள்ளது. 'அடிமை' என்னும் சொல் துன்பம் தருவதொன்றுபோலத் தோன்றும். "பரதந்திரியம் கரைகழி பந்தம்" என்று மெய்ந் நூல்களிலும் கூறப்படுகின்றது. நாம் காணும் அடிமை நிலை நம்மை நம் விருப்பப்படி இன்பத்திற் செல்ல வொட்டாமல் தடுத்து நிற்கின்ற அடிமை நிலை. உயிர்கள் இறைவனிடத்தில் சென்று நிற்கின்ற அடிமை நிலை இப்படிப்பட்டதன்று. இன்பத்தை நுகர்ந்து நிற்பது தவிர வேறு யாதொரு செயலையும் செய்யலாகாத நிலை. இத்தகையதொரு நிலை கிடைப்பதாயின், அதனை, 'வேண்டா' என்று விலக்குவாரும் இருப்பரோ? பாசத்திற்கு அடிமைப் பட்டிருக்கும் பரதந்திரியத்தைத்தான் மெய்ந் நூல்கள், "கரைகழி பந்தம்" என்கின்றன.

இப்பொழுதுள்ள நிலை பாசத்திற்கு அடிமையுற்று நிற்கும் நிலை. இஃது எந்த அளவில் நீங்கினுலும் அந்த அளவில் இன்பமே. இறைவனை அடைந்து நிற்கும் அடிமை நிலை எந்த

அளவில் நீங்கினும் அந்த அளவில் துன்பமே. அதனால், அந்நிலையில் நீங்காது நிலைத்து நிற்கவே மெய்யுணர்ந்தோர் அனைவரும் விரும்புவர். ஆகவே, இயற்கையிலே உயிர்கள் இறைவனுக்கு அடிமைகளாய் உள்ள நிலை புலனாகும் காலம் ஒன்று உண்டாகுமாயின், அதனை அவர்கள் பெரியதொரு நற்காலமாக மகிழ்ந்து போற்றுவர். அப்பர் பெருமான் தமது முதுமை நிலையில் அத்தகைய நற்காலத்தைப் பெற்றார். அதனால், தாம் அகமகிழ்வும், கழிவிரக்கமும் ஒருங்கே கொள்கின்றார்.

அவரை ஆட்கொண்ட பெருமான் தலைமைத் தேவராலும் அடைய இயலாத தனிப் பெருந்தலைவன். ஒருவரையும் மதியாத செருக்கும், உடல் வலிமையும் மிக்க சலந்தராசுரனைச் சக்கரப் படையால் தானே அழியும்படி செய்தவன் என்றால் அவன் எதிர்நிற்க வல்லோர் யார்! அவனை யடைந்தவர்க்கு யாரால் என்ன துன்பம் உண்டாகும்! கண்டாலே அச்சம் உண்டாகும் பாம்பு ஒன்றல்ல; இரண்டல்ல; அளவற்றவைகளை ஆபரணமாக அவன் எடுத்து அணிந்து கொண்டிருப்பதையும், பல்லூழி காலத்திலும் கணக்கின்றித் தோன்றி மடிந்தவர்களது எலும்பு களாலாய மாலைகள் அவன் திருமேனியில் புரள்கின்றதையும் பார்த்தால், யார்தான் அவனை, 'என்றும் அழியா இறைவன்' என்று எண்ணமாட்டார்கள்! இத்தகைய அவன், 'தான் இருக்கும் இடத்தில் பிறரெல்லாம் வந்து தன்னைக் காண வேண்டும்' என்று இராமல், அவரவர் இருக்கும் இடங்களில் தான் சென்று கோயில் கொண்டிருக்கின்றான் என்றால், அவனை யார்தான், 'கருணாமூர்த்தி' என்றும், 'அருட்பெரு வள்ளல்' என்றும் போற்றமாட்டார்கள்! ஆயினும், முன்பே அவனைப் போற்றும் நிலை அவர்க்கு வாய்த்திருந்தும் போற்றாமல் எண்ணில்லாத நாட்கள் எவ்வகையிலோ போக்கி விட்டதை எண்ணி எண்ணி இரங்கிப் பாடுகின்ற அவர், அவன் கோயில் கொண்டிருக்கும் சில இடங்களையும் குறிப்பிட்டுச் சலந்தரா சுரனை அழித்ததும், அரவும் என்பும் பூண்டதுமாகிய குறிப்புக் களுடன் அவன் கேடிலியாய் விளங்கும் நிலையை எடுத்துக் கூறி, அப்பெருமான் புள்ளிருக்கு வேளூரில் எழுந்தருளி யிருக்கும் சிறப்பையும் புலப்படுத்தருளினார். அவ் அரிய திருத் தாண்டகம் இது:

ஆண்டானை அடியேனை ஆளாக் கொண்டு,
அடியோடு முடிஅயன்மால் அறியா வண்ணம்
நீண்டானை, நெடுங்களமா நகரான் றன்னை,
நேமிவான் படையால்நீள் உரவோன் ஆகம்
கீண்டானை, கேதாரம் மேவி னானை,
கேடிலியை, கிளர்பொறிவா ளரவோடு என்பு
பூண்டானை, புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே!

---

## ஸ்ரீ முத்தையன் பஜனைக் கீர்த்தனை

சித்தர்புரம், புலவர், திரு இராசப்பன்

இராகம் - தோடி ] [ தாளம் - ஆதி

பல்லவி

ஆடுதுபார் — மயில்நட — மாடுதுபார்

அனுபல்லவி

கூடும் புயலைக்கண்டு பூரித்து முத்துக்
குமரா குமரா குமராவெனக் கூப்பிட்டாடுதுபார்.

சரணங்கள்

1 ஆதி சேடனுடல் பதறப் — பதற
அவுண ரினங்கள் கதறக் — கதற
நீதியாளர் பவஞ் சிதறச் — சிதற
நித்திய முத்தையன் மெய்த்தெய்வமென்று கொண்டாடுதுபார்

2 முத்துக் குமாரவேள் வருக — வருக
மூவுலகச் செல்வந் தருக — தருக
சித்தத்தி லானந்தம் பெருக — பெருக
திகதத்தத் திகதத்தத் திகதத்தவென்றுகூத் தாடுதுபார்

3 பரிதிப் புரியோர் திகழத் — திகழ
பண்ணவர் மண்ணவர் மகிழ — மகிழ
சுருதி முடிவும் புகழப் — புகழ
தொந்தோம் தொந்தோம் தொந்தோமென்று பரிந்தாடுதுபார்

4 குதர்க்க முடையோர் செல்லுமின் — செல்லுமின்
குணத்தை யுடையோர் நில்லுமின் — நில்லுமின்
சதித்த கோபத்தைக் கெல்லுமின் — கெல்லுமின்
ததிதய் ததிதய் ததிதய்யென்று கூத்தாடுதுபார்.

# மகா சிவராத்திரி

சிவாகம வித்துவான்

**சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்**

மாசி மாதத்தில் தேய்பிறைச் சதுர்த்தசி தினம் மஹா சிவராத்திரி எனப்படும். அன்று சூரிய உதயத்தில் நித்திய கருமங்களை முடித்து சிவ நினைவுடன் பகல் முழுவதும் பட்டினியிருந்து இரவு நான்கு யாமத்திலும் உறக்கமில்லாமல் சிவபூஜை செய்தல்வேண்டும். சிவபூஜையில்லாதவர்கள் கோயிலுக்குச் சென்று சிவபெருமானுக்கு அபிடேகம் முதலானது செய்வித்து தரிசித்து மறுதினம் காலை சிவவழிபாடு செய்து பாரணம் செய்ய வேண்டும்.

शिवं च पूजयित्वाऽथ योजागर्ति चतुर्दशीम् ।
मातुः पयोधर रसं नपिबेच्च कदाचन ॥

சிவஞ்ச பூஜயித்வாத யோஜாகர்த்தி சதுர்த்தசீம் |
மாது: பயோதரரஸம் நபிபேச்ச கதாசந ||

சதுர்த்தசியில் சிவனைப்பூஜித்து இரவு பூராவாக கண்விழித் திருப்பவர் மறுமுறை தாயின் ஸ்த்தன்யபானம் ஒருபொழுதும் செய்யமாட்டார்கள். அதாவது பிறவிப்பிணி கிடையாது என்பது பொருள்.

எனவே நாளது கீலக ஆண்டு மாசித்திங்கள் 4-ம் தேதி (15—2—69) சனிக்கிழமை, சதுர்த்தசி திதி 45-5 திருவோண நக்ஷத்திரம் 52-34க்கு மேல் அவிட்ட நக்ஷத்திரம் கூடிய நன்னாளில் மஹா சிவராத்திரி விரதானுஷ்டானம் பூஜை முதலிய சிவாராதனம் செய்யவேண்டும்.

குமாரதந்திரம் :

रात्रौ यामद्वयादर्वाक् घटिकैका महानिशा ।
तस्यां चतुर्दशी यस्मात् तद्रात्रिश्शिवरात्रिका ॥

ராத்ரௌ யாமத்யாதர்வாக் கடிகைகா மஹாநிசா |
தஸ்யாம் சதுர்த்தசீ யஸ்மாத் தத்ராத்ரிச் சிவராத்ரிகா ||

இரவு இரண்டு யாமத்திற்குமேல் ஒருநாழிகை மஹாநிசி காலம் அந்தக் காலத்தில் சதுர்த்தசி யிருப்பின் அவ்விரவு சிவராத்ரி யாகும். இவ்வாண்டு சனிக்கிழமை இரவு 15 நாழிகை ஐந்து விநாடி சதுர்த்தசி இருக்கிறது. அப்பொழுது இலிங்கோத்பவ காலம் வந்துவிடுகிறது.

காமிகம் :

महानिशायाः परतः त्रयोदशियुतं तु चेत् ।
अमा चतुर्दशी पूजा नदोषमिति कीर्त्तितम् ॥

மஹாநிசாயா: பரத: த்ரயோதசி யுதந்துசேத் ।
அமா சதுர்த்தசிபூஜா நதோஷமிதி கீர்த்திதம் ॥

(முதல் நாள்) மகாநிசிக்குப் பிறகு திரயோதசி இருப்பின் (மறுதினம்) அமாவாசையோடு கூடிய சதுர்த்தசியில் சிவராத்ரி பூஜை செய்தல் தோஷமில்லை.

இவ்வாண்டு முதல்நாள் வெள்ளிக்கிழமை திரயோதசி 50-0 இருப்பதால் மஹாநிசிகாலமான 15-நாழிகைக்குமேல் சதுர்த்தசி யிருப்பதான மறுதினமான சனிக்கிழமை இரவு நாழிகை 15-5க்குமேல் வரும் அமா சம்பந்தமான தோஷம் கிடையாது.

சுயாம்புவம் :

अमावास्यायुतावापि त्रयोदशियुतापिवा ।
चतुर्दश्यधिका रात्रिः शिवरात्रिरिति स्मृता ॥

அமாவாஸ்யாயுதாவாபி த்ரயோதசி யுதாபிவா ।
சதுர்த்தச்யதிகா ராத்ரி: சிவராத்ரி ரிதிஸ்ம்ருதா ॥

மஹா சிவராத்திரிக்கு உரியதான சதுர்த்தசிதிதியானது அமாவாசையோடு கூடியதாக இருப்பினும் அல்லது த்ரயோதசி யுடன் கூடியிருப்பினும் சதுர்த்தசி அதிக நாழிகையிருக்கும் தினத்தில் சிவராத்ரிபூஜை செய்யவேண்டும்.

இவ்வாண்டு சனிக்கிழமை தினத்தில் சதுர்த்தசிதிதி 45-5 நாழிகையிருக்கிறது. முதல்நாள் 10-நாழிகைதான் சதுர்த்தசி இருக்கிறது. ஆதலால் சனிக்கிழமையில் சிவராத்ரிபூஜை செய்ய வேண்டும்.

நாரதீய ஸம்ஹிதை :

अर्धरात्र युता यत्र माघकृष्णा चतुर्दशी ।
शिवरात्रिव्रतं तत्र चाश्वमेध फलं लभेत् ॥

அர்த்தராத்ரயுதாயத்ர மாக க்ருஷ்ண சதுர்த்தசீ |
சிவராத்ரி வ்ருதம் தத்ர சாச்வமேத பலம் லபேத் ||

நடு இரவுடன் கூடிய மாசிமாதத்திய கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் சிவராத்ரி விரதமனுஷ்டித்தால் அச்வமேதயாகம் செய்த பலனையடைவான்.

இவ்வாண்டு சனிக்கிழமை நடுநிசியில் சதுர்த்தசியிருப்பதால் உயர்ந்த பயனைக்கொடுக்கும் வல்லமையுள்ளது.

சிவராத்ரி நிர்ணயம் :

पूर्वेद्युर्वा परेद्युर्वा महानिशि चतुर्दशी ।
व्याप्ताच दृश्यते यस्यां तस्यां कुर्यात् व्रतं नरः ॥

பூர்வேத்யுர்வாபரேத்யுர்வா மஹாநிசி சதுர்த்தசீ |
வ்யாப்த்தாச த்ருச்யதே யஸ்யாம் தஸ்யாம் குர்யாத்
வ்ரதம் நர: ||

முதல் தினமாயினும் மறுதினமாயினும் என்று மஹாநிசியில் சதுர்த்தசி வியாபித்து இருக்கிறதோ அந்த சதுர்த்தசியில் சிவார்ச்சனையைச் செய்யவேண்டும்.

இம் முறைப்படியும் சனிக்கிழமை மஹாநிசி காலத்தில் சதுர்த்தசி இருப்பதைக் காணவும்.

விமலம் :

आदित्यास्तमयेकाले अस्तिचेद्या चतुर्दशी ।
तद्रात्रौ शिवरात्रिः स्यात् साभवेदुत्तमोत्तमा ॥

ஆதித்யாஸ்தமயே காலே அஸ்திசேத்யா சதுர்த்தசீ |
தத்ராத்ரௌ சிவராத்ரிச்யாத் ஸாபவேதுத்த மோத்தமா ||

சூரியன் அஸ்தமிக்கும் காலத்தில் சதுர்த்தசியானது இருக்குமாகில் அந்த சிவராத்திரி உத்தமம்.

இதன்படி சனிக்கிழமை சூரிய அஸ்தமன காலத்தில் சதுர்த்தசியிருப்பதால் உத்தமமாகும்.

இவ் வாக்கியங்களைக் கொண்டு சிவராத்ரி பூஜைக்கு முக்கியம் லிங்கோத்பவ காலத்தில் வியாபித்ததான சதுர்த்தசி திதியாகும்.

இலிங்கோத்பவ காலமோவெனில் :

மாசிமாதத்தில் தோன்றும் மதிக்கலை குறைந்து தேயும்
ஆசி பன்னுன்காம் பக்கத்து அரை இருள் யாமந்தன்னில்
தேசினுல் விளங்குஞ் சோதிச் செஞ்சுடர் ஆகிநின்ற
காசிலா நுதல் கண்பெம்மான் தன்னுருக்காட்டி நின்றான்.

— முதுமொழி.

உத்தர காரணம் :

हरिश्रविष्ठ वारीश ऋक्ष संयुक्त तद्दिने ।
तद्रात्रौ शिवपूजायाः अमादोषो नविद्यते ॥

ஹரிச்ரவிஷ்டவாரீச ருக்ஷ ஸம்யுக்த்த நத்திநே ।
தத்ராத்ரௌ சிவபூஜாயா: அமாதோஷோ நவித்யதே ॥

திருவோணம், அவிட்டம், சதயம் என்ற நக்ஷத்திரங்களின் சேர்க்கை இருக்குமாயின் அமாதோஷம் கிடையாது.

இவ்வாக்கியத்தின்படி சனிக்கிழமை திருவோண நக்ஷத்திரம் 52-34ம் அதன்பிறகு அவிட்டமும் இருப்பதால் அமா சம்பந்தமான தோஷம் கிடையாது.

निशीथात्परतो यत्र कलामात्रं कुहूर्भवेत् ।
नपूजयति तत्रेशं तन्त्रमार्गानु सारिणः ॥

நிசீதாத்பரதோயத்ர கலாமாத்ரம் குஹூர்ப்பவேத்
நபூஜயதி தத்ரேசம் தந்திரமார்க்காநு ஸாரிண: ॥

தந்திர மார்க்கத்தை அவலம்பிக்கிறவர்களான சோமம், பாசுபதம், முதலிய மதத்தினர்கள் சிறிதளவு அமாசந்தம்கூட கூடாது என்று விலக்குவார்கள்.

சித்தாந்தத்தின்படி நாளது கிலகவூ மாசிமீ 4உ (15—2—69) சனிக்கிழமை மஹாசிவராத்திரியாகும்.

# செய்திகள்

## தருமையாதீனத்தில்
## ஸ்ரீ சொக்கநாதருக்குத் தனுர்மாதச் சிறப்பு வழிபாடு

தருமையாதீனத்தில் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு மார்கழிமாதம் முழுவதும் திருப்பள்ளியெழுச்சி வழிபாடு சிறந்த முறையில் நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் ஒவ்வொருநாளும் விடியற்காலையில் திருப்பள்ளி யெழுச்சி வழிபாட்டை நிகழ்த்தியருளினார்கள்.

ஆதீனத் திருமடத்தின் அன்பர்களாகிய மாயூரம் ஆடூர்ப் பாக்கியச் செட்டியார்கள் 7—1—69 செவ்வாய்க்கிழமையன்று ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு செய்வித்து வழிபட்டார்கள்.

8—1—69 புதன்கிழமை ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்கள் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்வித்து வழிபாடாற்றி, ஸ்ரீ ஞானபுரீசுவரர், ஸ்ரீ தர்மபுரீசுவரர், ஸ்ரீ துர்க்காம்பிகைத் திருக்கோயில்களிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, ஸ்ரீ ஞானபுரீசுவரருக்குப் பஞ்சமுகார்ச்சனையும், ஸ்ரீ துர்க்காம்பிகைக்கு நவசக்தி அர்ச்சனையும் செய்வித்து வழிபாடாற்றினார்கள்.

9—1—69 வியாழக்கிழமை ஆதீனத் திருமடத்தின் காரியஸ்தர்களும், ஆதீனத் திருமடத்திலுள்ள தேவஸ்தானக் காரியாலயத்தின் காரியஸ்தர்களும் ஆதீனக் கல்லூரி ஆசிரியர்களும் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்வித்து வழிபாடாற்றி ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்துத் திருநீறு பெற்றுக்கொண்டார்கள். மேலும் ஸ்ரீ ஞானபுரீஸ்வரருக்குப் பஞ்சமுகார்ச்சனையும் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகைக்கு நவசக்தியர்ச்சனையும் செய்து தரிசித்தார்கள்.

10—1—69 வெள்ளிக்கிழமை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் நாடோறும் செய்யும் வழிபாட்டோடு சிறப்பாக தமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு மிகச் சிறந்த முறையில் அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபட்டு மகிழ்ந்தார்கள்.

11—1—69 சனிக்கிழமை ஆதீனத் திருமடத்தின் ஓதுவா மூர்த்திகளும், சிப்பந்திகளும், ஏனைய பணியாளர்களும் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் மூலம் சிறப்பு வழிபாடு செய்வித்துத் தரிசித்தார்கள்.

## தருமையாதீனத் திருக்கோயில்களில் பாவை மாநாடு

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில் 26—12—68 வியாழக்கிழமை மாலை 6 மணி முதல் பாவை மாநாடு நடைபெற்றது. அன்று காஞ்சிபுரம், தருமையாதீனப் புலவர், சித்தாந்த சிகாமணி சித்தாந்தக் கலைச்செல்வர், திரு. க. வச்சிரவேல் முதலியார் பி. ஏ., எல். டி அவர்கள், "திருவெம்பாவைச் சிறப்பு" என்ற தலைப்பிலும், தேவகோட்டை, தருமையாதீனப் புலவர், பாலகவி, வயிநாகரம், திரு. வே இராமநாதன் செட்டியார் அவர்கள் "திருப்பள்ளியெழுச்சி" என்ற தலைப்பிலும் சொற்பொழிவு நிகழ்த்தினர். அடுத்து சென்னை பேபி கிரிஜா குழுவினரால் "கண்ணப்பர்" வரலாறு கதாகாலட்சேபமாக நிகழ்த்தப்பட்டது.

திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 27—12—68 வெள்ளிக்கிழமை மாலை 6 மணி முதல் பாவை மாநாடு நடைபெற்றது. அன்று, மன்னன்பந்தல், அ. வ. அ. கல்லூரி, ஆங்கிலப் பேராசிரியர். திரு, K. S. நாகராசன் M. A., அவர்கள் 'பாவைப்பாட்டு" என்ற தலைப்பிலும், தேவகோட்டை தருமையாதீனப்புலவர், பாலகவி, வயிநாகரம், திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் "மார்கழி நீராடல்" என்ற தலைப்பிலும் சொற்பெருக்காற்றினர். பின்னர் சென்னை குமாரி கௌரி குழுவினரால் "காரைக்காலம்மையார்" வரலாறு கதாகாலட்சேபமாக நிகழ்த்தப்பட்டது.

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 27—12—68 வெள்ளிக்கிழமை மாலை 6 மணி முதல் பாவை மாநாடு நடைபெற்றது. அன்று, திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர், திரு. கே. எம். வேங்கடராமையா, எம். ஏ., அவர்கள் "இருபாவை" என்ற தலைப்பிலும், தருமையாதீனப்

பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், தருமையாதீனப் புலவர் சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் "திருப்பள்ளியெழுச்சி" என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினர்கள். அடுத்து தஞ்சை திருமதி. டி. ஆர். கமலாமூர்த்தி குழுவினரால் "ஆண்டாள்" வரலாறு கதாகாலட்சேபமாக நிகழ்த்தப்பட்டது.

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 27, 28—12—68 வெள்ளி, சனிக்கிழமைகளில் மாலை 6 மணி முதல் பாவை மாநாடு நடைபெற்றது. 27—12—68 வெள்ளிக்கிழமையன்று காஞ்சிபுரம், தருமையாதீனப் புலவர், சித்தாந்த சிகாமணி சித்தாந்தக் கலைச்செல்வர், திரு. க. வச்சிரவேல் முதலியார் பி ஏ., எல். டி., அவர்கள் "மார்கழி நீராடல்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றியபிறகு, சென்னை குமாரி கௌரி குழுவினரால் "மாணிக்கவாசகர்" வரலாறு கதாகாலட்சேபமாக நிகழ்த்தப்பட்டது.

28—12—68 சனிக்கிழமையன்று புலவர், திரு. கீரன் அவர்கள் "பாவைப் பாட்டு" என்ற தலைப்பில் விரிவுரையாற்றினர்கள்.

திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் 28—12—68 சனிக்கிழமை மாலை 6 மணி முதல் பாவை மாநாடு நடைபெற்றது. அன்று தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர் திருநெறிச்செம்மல், நல்லிசைப் புலவர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் "மார்கழி நீராடல்" என்ற தலைப்பிலும், தேவகோட்டை, தருமையாதீனப் புலவர், பாலகவி, வயிநாகரம், திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள். "திருவெம்பாவைச் சிறப்பு" என்ற தலைப்பிலும் சொற்பெருக்காற்றினர். பின்னர், தஞ்சை, திருமதி. டி. ஆர் கமலாமூர்த்தி குழுவினரால் "மாணிக்கவாசகர்" வரலாறு கதாகாலக்ஷேபமாக நிகழ்த்தப்பட்டது.

## திருவெம்பாவைச் சொற்பொழிவுகள்

மாயூரம் ஸ்ரீ காசிவிசுவநாதசுவாமி தேவஸ்தானத்தில் 26—12—68 அன்று மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் "மார்கழி நீராடல்" என்ற தலைப்பிலும், 28—12—68 அன்று குறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான், திரு. வே. கண்ணப்பன் அவர்கள் "மார்கழி நீராடல்" என்ற தலைப்பிலும், பறியலூர்

ஸ்ரீ விரட்டேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான், சிரோமணி, திரு. வி. சபேசன் அவர்கள் "பாவைப்பயன்" என்ற தலைப்பிலும், குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான், சொ. சிங்காரவேலன் எம். ஏ., அவர்கள் "பாவைநோன்பு" என்ற தலைப்பிலும், 29—12—68 அன்று, பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் "திருவெம்பாவை" என்ற தலைப்பிலும், தலைஞாயிறு ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான், திரு. வே கண்ணப்பன் அவர்கள் "பாவைப்பயன்" என்ற தலைப்பிலும், விளநகர் ஸ்ரீ துறைகாட்டும் வள்ளலார்சுவாமி தேவஸ்தானத்தில் திரு. வி. சபேசன் அவர்கள் "திருவெம்பாவை" என்ற தலைப்பிலும், 30—12—68 அன்று வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீ சக்திபுரீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் "பாவை நோன்பு" என்ற தலைப்பிலும், ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் "மார்கழி நீராடல்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர்கள்.

### சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

## பொங்கல் புதுநாள் விழா

சென்னை. தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலயத்தில் 14—1—1969 மாலை தமிழவேள், திரு. பி. டி. இராஜன் அவர்கள் தலைமையில் பொங்கல் புதுநாள் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. தலைவர் தமது தலைமையுரையில் விவசாயிகளும் மிராசுதார்களும் ஒற்றுமையாக இருக்கும்போது கொண்டாடுவதுதான் உண்மையான பொங்கல் விழா. இக்காலத்தில் இரு திறத்தாரும் பகையாளராக உள்ளனர். இபபோது கொண்டாடும் பொங்கல் விழா சம்பிரதாய விழாதான். விவசாயிகள் தங்கள் தோட்டத்தில் விளைந்த கறிகாய்களை முதலாளிகளுக்கு அன்புடன் கொடுப்பதும். முதலாளிகள் தொழிலாளரான விவசாயிகட்குப் பொங்கல் பானை மற்றும் குடும்பத்திற்கு வேண்டிய பொருள்களைக் கடைமை உணர்ந்து அன்புடன் கொடுப்பதும் தமிழகத்தில் நடந்து வந்த முறைகள். நமக்குப் பலதுறையிலும் உதவிவரும் பசுக்குலத்தைப் போற்றிப் பாராட்டும் பண்பும் தமிழ் மக்களின் நாகரிகத்தைப்

பறைசாற்றி வருவதாகும். நாகரிகமும் பண்பாடும் பெண் மக்களால்தான் பாதுகாக்கப் படுகின்றன. மங்கையர்க்கரசி யாரால்தான் மதுரையில் சைவமும், தமிழும். தமிழ்ப்பண்பும் நிலைத்தது. சைவம் போனால் தமிழ்ப்பண்பே போயிருக்கும். அதனால்தான் சைவங் காத்த மங்கையர்க்கரசியாருக்கு மதுரைக் கோயிலில் ஆலயம் எழுப்பினோம். தம்பிரான் சுவாமிகள் என்னைப் பாராட்டினார்கள். என்னிடத்தில் சில நல்ல குணங்கள் இருக்கிறது என்றால் அது தாயையே சாரும். என் தாய் படிக்கத் தெரியாதவர். எனக்குப் பாலூட்டும் போதே தெய்வ பக்தியையும் ஊட்டி வளர்த்தார். நாட்டில் பெண்கள்தான் முக்கியமானவர்கள். அவர்கள் சரியாக இருந்தால் ஆண்கள் கெட்டாலும் நாடு கெட்டுப் போகாது. பெண்கள் படிக்க வேண்டும். ஆனால் உத்தியோகத்திற்குப் போகக் கூடாது. வேண்டுமானால் ஆசிரியர் உத்தியோகத்திற்குப் போகலாம். முரட்டு வேலைகளுக்கு, மந்திரி வேலைக்குப் பெண்கள் போகக் கூடாது. நல்ல குழந்தைகளைப் பெற்று நல்ல பண்பாட்டுடன் வளர்த்து நாட்டை ஆள்வதற்குத் தயார்செய்ய வேண்டும். வீட்டின் இராணியாக இருக்க வேண்டியவர்கள் பெண்மணிகள். நாட்டு அரசனுக்கு வேண்டியவர்கள் பெண்மணிகள். நாட்டு அரசனாக இருக்க வேண்டியவர்கள் ஆடவர்கள். வன்மையான வேலைகளில் பெண்ணினம் ஈடுபடக் கூடாது. அவர்களின் பெண்மைக்கு இழுக்கு வரக்கூடாது. இவற்றைப் பெண்கள் சிந்தித்துச் செயல்படுவார்கள் என்று நம்புகிறேன். ஒவ்வொரு வரும் நல்லது செய்யவேணும்; செய்யாவிட்டாலும் குற்றமில்லை, கெடுதல் செய்யாது இருந்தால் அதுவே பேரறமாகும். மேலும் பிறர் குற்றம் பார்க்காமல் தன் குற்றம் பார்த்துப் பழகுதல் நம் அனைவருக்கும் நலம் விளைவிக்கும். என் வாழ்நாளை இந்த முறையில் கூடியவரை நடத்தி வருகிறேன். நீங்களும் இப் பொங்கல் புதுநாளில் சங்கற்பம் செய்து கொண்டு வாழத் தொடங்குங்கள் என்று குறிப்பிட்டார்கள்.

திருக்கோயில் ஆசிரியர், திரு. என். ஆர். முருகவேள். "பொங்கல் புதுநாள் சிறப்பு" என்பது பற்றிச் சங்க இலக்கிய மேற்கோள்களுடன் அரிய ஆராய்ச்சி விரிவுரையாற்றினர்கள். திரு. மு. இராமசுப்பிரமணிய சர்மா குழுவினர் "திருநீல கண்டர்" சரித்திரத்தைத் தக்க பக்க வாத்தியங்களுடன் இன்னிசைக் கதா காலட்சேபமாக நிகழ்த்தி மகிழ்வித்தனர். தவத்திரு சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் நவின்றார்கள். குமாரி கௌரி. சம்யுக்தா, தேனார்மொழி, மூவரும் கடவுள் வணக்கமாகத் தேவாரப் பாடல் களைப்பாடி மகிழ்வித்தனர்.

ஓம்

ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்,
தொண்டன்
தருமையாதீன சமயப்பிரசார நிலைய
வழிபாட்டுக்குழு, தியாகராய நகர்.

சென்னை - 17.
31—12—68.

" நன்றியால் வாழ்வது உள்ளம் " - சம்பந்தர்.

" செய்ந்நன்றி குன்றேல் " - குருஞானசம்பந்தர்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் பொன்னார் திருவடி மலர்களுக்கு, இப்புத்தாண்டுப் பெருநாளில், மிகவும் பணிவார்ந்த வணக்கங்களை, நமது சமயப் பிரசார நிலையத்தின் வழிபாட்டுக் குழுவின் சார்பில், திசை நோக்கிக் கை தொழுது, அடி பணிந்து செலுத்திக்கொள்ளப் பெரிதும் விழைகின்றேன்.

நமது சமயப் பிரசார நிலையத்தின் வழிபாட்டுக் குழுவின் சார்பில், திசை நோக்கிக் கை தொழுது, அடிபணிந்து செலுத்திக்கொள்ளப் பெரிதும் விழைகின்றேன்.

எங்கள் அனைவரின் அன்பிற்கும் வணக்கத்திற்கும் உரிய தவநலஞ்சான்ற நமது தம்பிரான் சுவாமிகள் அவர்கள், எங்களுக்கு உற்ற துணையும் வழிகாட்டியும் ஆக இருந்து, ஆங்காங்கே பல அறிவருள் உரைகளை நிகழ்த்தி, இவ் யாத்திரையின் மூலம், எங்களுக்குப் பல நலங்களையும் உணர்வுகளையும் விளைவித்தருளினார்கள். நெடுவழிப் பயணத்தில் நேரும் களைப்பு சோர்வு முதலியனவற்றைச் சிறிதும் பொருட்படுத்தாமல், வழிபாட்டில் பரபரப்பின்றி, எல்லாத் தலங்களிலும் நிரம்பிய பொறுமையுடனும் நிதானத்துடனும், மிக்க பக்தி சிரத்தையுடன், திருமுறைப் பாடல்களை இனிய இசை நலத்துடன் தாமே மனமுருக ஓதியும் ஓதுவித்தும், வழிபாடு நிகழ்த்திய சிறப்பும் அருமைப்பாடும் விளங்க வழிபட்ட திறம், உண்மையிலேயே உள்ளம் உருக்கி எங்கள் அனைவரையும் வியப்பும் விம்மிதமும் கொள்ளச் செய்தது. சிறப்பாகத் திருவாரூரில் புற்றிடங்கொண்டபெருமான் திருமுன்னிலையிலும், அரநெறிஅப்பர் திருமுன்னிலையிலும், மூன்று மணி நேரத்திற்குமேல் நின்றுகொண்டே, 36 திருப்பதிகங்களையும் ஒருசேரத் தொடர்ந்து இசையுடன் ஓதி வழிபட்டும், வழிபடுவித்தும், மகிழ்வித்த மாட்சிமைச் செயல், யாங்கள் என்றும் மறக்க இயலாத அரியபெரிய நிகழ்ச்சியாகும்.

திருவாரூர்க் கட்டளை விசாரணை ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், அன்று தமது உரையில் குறிப்பிட்டது போல, அந்நிகழ்ச்சி ஒரு பெரும் 'ஞான பூசை' ஆகவும், "திருமுறைப் பாராயண வேள்வி"யாகவும், மிகச்சிறந்து விளங்கியது. இங்ஙனமே அவ்வக் கோயில்களிலும் ஸ்ரீமத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வழிபாடு நிகழ்த்திய சிறப்பு, எங்கள் பண்படாத உள்ளங்களையும் பெரிதும் கவர்ந்த சிந்தனையைத் திருத்தி, பெருவளப்படுத்தியுள்ளது என்று, சுருங்கச் சொல்லியமைவது அல்லாமல், வேறு பிரிதெதுவும் விளக்கிக் கூறும் ஆற்றலின்றி, "ஊமையர் கண்ட கனு" என்னும் நிலையில் பெருமகிழ்ச்சியும் பெரு நன்றியும் உற்றுத் திளைக்கின்றோம்.

இத்துணையும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் அருளாசியினாலும், ஆதரவினாலுமே எளியேங்கட்கு வாய்த்தன என்பதனை எண்ணியெண்ணி உணர்ந்து, வழிபட்டுக் குழுவினராகிய நாங்கள் அனைவரும், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் பெருங்கருணைத் திறனை நினைந்து நினைந்து வியந்து மகிழ்கின்றோம்.

இம்மட்டோ! திருவாரூர், வைத்தீசுவரன்கோயில், சீகாழி, தருமபுரம் ஆகிய இடங்களில் "பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து" ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், சிறந்த இனிய சிற்றுண்டி வகைகளை வழங்குவித்தும், இடவசதிகளும் வழிபாட்டு வசதிகளும் ஏற்பாடு செய்துகொடுப்பித்தும், எங்களுக்குப் புரிந்தருளிய பெருந்தண்ணளிக்கு யாங்கள் அனைவரும் நமது ஆதீனத்திற்கு வழி வழி ஆளாவது அன்றி, வேறு எவ்வகையில் எங்கள் நன்றியைப் புலப்படுத்திக்கொள்ள வல்லோம்?

தங்களின் பொன்னார் திருவடிகளுக்கு மீண்டும் மீண்டும் எங்கள் உள்ளம் கலந்து நிறைந்து பொங்கியெழும் அன்பினையும் நன்றியினையும் பணிவார்ந்த வணக்கங்களையும் தாழ்ந்து பணிந்து, தலைவணங்கித் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தோம்
நினையாது ஒருபோதும் இருந்தறியோம்"

"மீளாது ஆளலாற் கைம்மாறு இல்லை"

இங்ஙனம்

தங்கள் அன்பும் பணிவும் நன்றியும் மிக்க
தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தின்
வழிபாட்டுக் குழுவினர் சார்பில்,

31—12—68

நா.ரா. முருகவேள்.

# இலவச சித்த வைத்தியசாலை

## டாக்டர். திரு. K. இராமகிருஷ்ணன்

## குன்ம ரோகம் ( அஜீர்ண ரோகம் )

உலகில் தோன்றிய மானிடர்கள் ஒவ்வொருவரும் தான் தேக சுகத்துடன் நீண்ட காலம் வாழவேண்டும் என எண்ணுவது சாலப்பொருந்தும். நாம் இவ்வுலகில் வாழ்வதற்கு இன்றியமையாதது உணவாகும். அவ்வுணவையும் அருந்தியது அற்றது போற்றி உண்டால் இந்த யாக்கைக்கு மருந்தென ஒன்றும் வேண்டாம். உணவை எப்படி உண்பது, எக்காலத்தில் உண்பது, எவ்வாறு உண்பது, கொள்ளத்தக்கது எது தள்ளத்தக்கது எது என்று நன்கு சிந்தித்து உணவு வகைகளை வேளையோடு நன்கு பசித்தபின் புசித்தால் நீண்ட நாட்கள் இப்பூவுலகில் நோய்நொடியின்றி வாழலாம். அற்ருல் அளவறிந்து உண்ணுமல் அகாலத்தில் உண்பது, அளவுக்குமேல் உண்பது, சதா ஏதாகிலும் உண்டுகொண்டே இருப்பது, தன் உடலுக்கு ஒத்துக்கொள்ளத்தகாத உணவுகளை உண்பதுபோன்ற கொடிய பழக்கங்களை ஒருவன் கடைப்பிடித்தால் அவன் உடலும் கொடிய அஜிரண ரோகத்தால் பீடிக்கப்பட்டு வருந்தவேண்டியிருக்கும். அதனுல்தான் நம் தெய்வப்புலவர் திருவள்ளுவப் பெருமான்,

" மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின் "

என்றும்,

" மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு "

என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அஜீர்ண ரோகத்தின் சுற்றங்கள் அக்கினி, மாந்தம், பித்தவாயு, உஷ்ணவாயு, குன்மம், மந்தாக்கினி, குன்மசூலை முதலியனவும் இன்னும் பல குடும்பங்களும் இருக்கின்றன.

இவைகள் 80 சத விகிதம் மக்களை தன் கருணைக் கரங்களால் அணைக்கின்றன. இனி இவைகள் மக்களை பீடிப்பதின் காரணங்களையும், அவைகளை விரட்டியடிக்கும் முறைகளையும் கவனிப்போம்.

**காரணங்கள் :**

நாம் உண்ணுகின்ற உணவுகள் இரைப்பையிலும் சிறு குடலிலும் சீரணமாகின்றது. இரைப்பையில் சீரணமாக சுமார் இரண்டு மூன்று மணி நேரம் ஆகின்றன. அங்கே உண்ட உணவு சடராக்கினி (Gastic Juice) என்னும் சீரண நீருடன் ஒன்றுசேருகின்றது. அந்த சடராக்கினியில் தண்ணீர், கரியுப்பு திராவகம் (Lactic acid) என்னும் புளிப்பு நீரும், ரத்த நீரில் இருக்கின்ற சில உப்புப் பொருள்களும் (Pepsine) என்னும் ஒரு வகைப் பதார்த்தமும் கலந்து இருக்கின்றன. இவற்றுள் நாம் உண்ணும்போது உற்பத்தியாகின்ற உமிழ் நீரும் கலந்து இரைப்பைக்கு செல்கின்றது. இரைப்பைக்கு போகின்ற ஆல்பியூமன் ஆகிய பல பதார்த்தங்களைச் சீரணிக்கச்செய்து அதன் குணத்தை மாற்றி ஒரு புது திரவப்பொருளாக மாற்றுகின்றது. அதற்கு பெப்டோன் என்று பெயர். அந்த பெப்டோன் வஸ்துவில் சிறிது இரைப்பையிலுள்ள நுண் இரத்த நாடிகள் கிரகித்துக் கொள்வதும் உண்டு. மற்றவை போஜன பதார்த்தங்களில் உள்ள கொழுப்போடு சேர்ந்து குடல் வளைவு வழியாக இறங்கி சிறு குடலை அடைகின்றது. குடல் வளைவில் உணவு இறங்கும் போது பித்தநீரும், கணையநீரும், சிறுகுடலில் உண்டாகின்ற Pepsin, Dipase ஆகிய சீரண நீர்களும் ஒன்றாகக் கலந்து சீரணமாகாத உணவுப் பொருள்களைச் சீரணிக்கச் செய்கின்றன. இவ்வாறு இரைப்பையில் ஒரு சீரணமும் சிறுகுடலில் ஒரு சீரணமும் ஏற்படுவதால் இரைப்பையைச் சேர்ந்த அஜீரணம் என்றும் சிறுகுடலைச் சார்ந்த அஜீரணம் என்றும் இருவித அஜீரண ரோகங்கள் உண்டாகின்றன. இவ்வித கொடிய ரோகங்கள் உண்டாக பலவித காரணங்கள் உண்டு.

அளவுமீறி சாப்பிடுதல், பக்குவமாகாத உணவுப் பொருள்களை உண்பது, ஆகாரங்களை நன்றாக மெல்லாமல் விழுங்குவது, மதுபானம் செய்வது, அடிக்கடி காப்பி, டீ சாப்பிடுவது, புகையிலை போன்ற லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பது போன்ற கொடிய பழக்கங்களாலும் தேகப்பயிற்சி யில்லாமல் இருத்தல்,

இரவில் அதிகநேரம் கண் விழித்தல், சதா சிந்தனையில் ஆழ்ந்திருத்தல், மனக்கவலை முதலிய காரணங்களாலும் இரைப்பை, கணையம் இவைகளில் வியாதிகள் உண்டாகின்றன. ஒவ்வொரு முறை ஆகாரம் சாப்பிட்ட பிறகு குறைந்தது ஆறு மணி நேரம் இடைவெளிவிட்டுப் புசிப்பதுதான் உத்தமம்.

அதனால்தான் அற்றால் அளவறிந்து உண்டால் இவ்வுடம்பு பலகாலம் நோய்நொடியின்றி வாழமுடியும் என வள்ளுவப் பெருந்தகை கூறியிருக்கின்றார்.

இரைப்பையின் வேலை முடிந்தவுடன் அதற்குச் சிறிது நேரமாவது ஓய்வுவேண்டும். அவ்வாறு அது ஓய்வெடுக்காவிடில் அதனால் இரைப்பை, மூளை, நுரையீரல் ஆகிய உறுப்புக்களில் ஏதாவதொன்றில் கெடுதல் ஏற்பட்டால் அக்கினிமாந்தத்தை உண்டாக்கி வாந்தியை உண்டுபண்ணும். சுரம், வாந்தி ஆகியவைகளால் இரத்தம் பிரகோபமடைந்து அதனால் அஜீரண ரோகம் ஏற்படுகிறது. இவ்வாறு வியாதிகண்டால் மந்தபசி மேல் வயிற்றுப்பள்ளத்தில் வேதனைப்பளுவுடன் வயிற்றில் வாயு சேர்ந்து சதா கடமுட என்று இரைதல், அடிக்கடி அபானவாயு பிரிதல், குமட்டல், வாந்தி, மலபந்தம், சிலருக்குப் பேதியும் மாறி மாறி ஏற்படுதல், நாக்கில் மாவுபோல் அழுக்கு படிதல், வாய் துர்நாற்றம் அடைதல், இருதயத்துடிப்பு மாறுபடுதல், இடுப்பில் அடிக்கடி வலி ஏற்படுதல், கைகால்கள் பலவீனப்பட்டு வேதனை அடைதல், தலை பாரமாகவும், தலைவலியும், தலைவலியுடன் ஒருவித மயக்கம் ஏற்படுதல், குலை எரிச்சலும் இரைப்பையில் ஒருவித குமட்டலும், பிரட்டலும், பித்தநீர் வாந்தியும், புளித்த ஏப்பமும் ஏற்படுதல்போன்ற பல வியாதிகளை உண்டுபண்ணும்.

ஜடராக்கினி குறைந்து சீரணம் மெதுவாக ஆனால் ஆகாரம் உண்ட பிறகு மேல்வயிற்றில் இடதுபுறமும், அடிவயிறும் புடைத்து இருக்கும். அப்போது வாயு உண்டாகும். துர்நாற்றத்துடன் புளித்த ஏப்பம் ஏற்படும். மலபந்தம் ஏற்படும். பசி மந்தப்படும். மனதில் ஒருவித திகிலும் ஏக்கமும் ஏற்படும். இரைப்பையில் அதிகமாக வாயு சேர்ந்தால் கடின சுவாசமும் இரைப்பும் ஏற்படும். இதனால் சிலர் தற்கொலை செய்து கொள்ளவும் துணிந்துவிடுகின்றார்கள்.

**அறிகுறிகள் :**

இந்த அஜீரண ரோகத்தைச் சாதாரணமாக சிறிது சிரமப் பட்டுத்தான்தெரிந்துகொள்ளமுடியும். அஜீரண ரோகத்திற் கான அறிகுறிகளே வயிற்றில் ஏற்படுகின்ற வேறு வியாதிகளி லும் உண்டு. பிள்வை, ரணம், சிலேஷ்ம ஜவ்வு ஸ்தாபிதம் ஆகிய இவைகள் வயிற்றிற்குள் காணும்போது வயிற்றில் அதிக வேதனை உண்டுபண்ணும். புண்ணுகை இருக்கும். இவைகளை அஜீரணம் என எண்ணிவிடக்கூடாது. க்ஷயம், கருப்பப்பை வியாதிகள் முதலிய இதர வியாதிகளாலும் வாமனம் காணப் படும். இரைப்பையில் வியாதியிருந்தால் ஆகாரம் உட்கொண்ட உடனே வேதனையை உண்டாக்கும். இவ்வாறு விகர்ப்பப் பட்டால் போஜனத்தால் அதனுடைய வேதனை குறையும். இவற்றைக்கவனத்தில்வைத்துக்கொண்டால்ரோகநிதானத்தை சிறிது விரைவில் அறியலாம். புண்ணினுல் ஏற்படும் வேதனை விடாமல் என்னேரமும் வலித்துக்கொண்டே இருக்கும். ஆனல் ஆகாரம் உள்ளுக்குச்சென்ருல் அது அதிகப்படும். (தொடரும்)

## வியாதியஸ்தர் குறிப்பு

எனக்கு ஒன்பது வருடமாக தோல் சம்பந்தமான வியாதி அதாவது குஷ்டரோகம் ஏற்பட்டு இரண்டு கைகள் இரண்டு கால்கள் பூராவும் புண் உண்டாகி சதா ரத்தமும் சீழும் கொட்டிக் கொண்டே இருக்கும். இடது கையில் இரண்டு விரல்கள் அழுகிக் குறைந்துகொண்டே வந்துவிட்டது. காலிலும் புண் ஏற்பட்டு ஆருமலேயே சீழ் ரத்தம் வந்துகொண்டிருந்தது திருவேண்காடு ஆஸ்பத்திரியில் சுமார் நான்கு வருடங்கள் வைத்தியம் செய்துகொண்டும் ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. 1967 பிப்ரவரி மாதம் சித்த வைத்தியசாலை வைத்தீஸ்வரன் கோவிலில் இருப்பதாகக் கேள்விப்பட்டு இங்கு வந்து ஒரு வருடம் வைத்தியம் செய்துகொண்டு ஆண்டவனையும் தரிசனம் செய்துகொண்டு போனேன். தற்சமயம் வைத்தியர் கொடுத்த மருந்தால் என் புண் பூராவும் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டது. நான் ஒரு பெண்ணுகை உருவில் நடமாடிக்கொண்டிருக் கிறேன். என்னைக் காப்பாற்றிய டாக்டர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(S.d) பாலாம்பாள்
W/o இராமமூர்த்தி அய்யர்
9—5—68 தெற்குவீதி, பச்சைமாதானம்.

# எதிர்காலம் - திரு. K. முத்துஜோதிடர்

( கீலகஞு மாசிமீ 1உ முதல் 30உ முடிய )

(12—2—69 முதல் 13—3—69 முடிய)

**1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

மேஷராசி அசுவதி நான்கு பாதங்களும் கிருத்திகை முதல் பாதமும் பூர்ணமான சுபத்தைத்தரும். பரணி நான்கு பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். வரவு செலவு சமனுகும். சுபாதிகளால் அதிகமான விரயம் ஏற்படும். ஆரோக்யக் குறைவு காட்டும். குடும்பத்தில் ஒற்றுமைக் குறைவு உண்டு பண்ணும். புதன், வியாழன் சுபமாகும்.

**2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½**

விருஷபராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தைத்தரும். ஜீவனம் ஓங்கும். இடம் மாறுதல் ஏற்படும். தூரதேச சஞ்சாரம் ஏற்படும். தனதான்யங்கள் அதிகமாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

**3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾**

மிதுனராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். அடிக்கடி சஞ்சாரமும் சகல காரியங்களிலும் தடங்கலும், வீண் செலவுகளும் சத்ருக்களுடைய உபத்திரவமும் உண்டாகும். மனம் சாந்தி அடையாது. மாதக்கடைசியில் 10 தினங்களில் சுபங்கள் ஏற்படும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

**4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்**

கடகராசி 9 பாதங்களும் சுபமுண்டாகும். எல்லாக் காரியங்களும் நன்மையாகவே நடக்கும். வியாபாரம் ஓங்கும். வித்யை விருத்தியடையும். நூதனமாக உத்தியோக லாபம் கிடைக்கும். மேலோர்களாலும் பெரியோர்களாலும் நன்மை ஏற்படும். தெய்வபலம் முன்னின்று காக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

### 5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். ஜீவனம் ஓங்கும். வம்சவிருத்தி ஏற்படும். இல்லறசுகம் நீடிக்கும். வியாபாரம், விவசாயம் செய்பலன்களுக்கு நூதன முறையில் தொழில் முன்னேற்றம் ஏற்படும். தெய்வபலம் காக்கும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கும். வியாழன், வெள்ளி சுப மாகும்.

### 6. கன்னி - உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். வரவு செலவு சமனாகும். கொஞ்சம் ஆரோக்யக் குறைவாக இருக்கும். உடனுக்குடன் சௌகரியமும் உண்டாகும். அசாத் தியமெல்லாம் சுலப சாத்தியமாகும். உலக பிரசித்தியும் கீர்த்தி யும் உண்டுபண்ணும். அமைதியும் சாந்தமும் ஏற்படும். சனி, ஞாயிறு சுபமாகும்.

### 7. துலாம் - சித்திரை ½, சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தையே தரும். எதிர்பாராத லாபங்களும் தனதான்ய விருத்தியும் ஜீவன விருத்தியும் தேவதா குருபக்தியும் உண்டாகும். ஆரோக்யம் உண்டாகும். சகல காரியங்களும் சுலபமாக சாத்தியமாகும். கீர்த்தி உண்டாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

### 8. விருச்சிகம் - விசாகம் - ¼, அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைக்கொடுக் கும். வரவு செலவு சமனாகும். இல்லறத்தில் மனம் சாந்தி அடை யும். நஷ்டமான பொருள் தானாக வந்துசேரும். உத்தியோ கம் ஓங்கும். ஆரோக்யம் உண்டாகும். புதன், வியாழன் சுப மாகும்.

### 9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். புத்தி ராதிகளால் கவலை உண்டுபண்ணும். தெய்வபலம் முன்னின்று காக்கும். குடும்பம் ஓங்கும் ஆரோக்யம் உண்டாகும். பந்து மித்திராதிகளால் நன்மை ஏற்படும். வெள்ளி, சனி சுபமாகும்.

### 10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தையே தரும். விவசாயம், வியாபாரம் முதலியவைகளால் எதிர்பாராத விசேஷ

லாபங்கள் ஏற்படும். நூதன முறையில் ஜல வசதிகள் ஏற்பட்டு விவசாயம் ஓங்கும். உத்தியோகத்தில் மேல் பதவிகள் உண்டாகும். ராஜாங்க மைத்திரமும், பரிசு பத்திரமும் கிடைக்கும். வம்சவிருத்தி ஏற்படும். குடும்பம் ஓங்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

## 11. கும்பம்-அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி 9 பாதங்களும் சுபத்தையே தரும். ஆரோக்யம் உண்டாகும். இல்லறம் ஓங்கும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். குடும்பத்தில் சுபமான காரியங்கள் நடைபெறும். தெய்வசக்தி பிரகாசிக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

## 12. மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் விசேஷமான நன்மையைத்தரும். விசித்திர கிரஹ லாபங்களும் ஸ்தாவர ஜங்கம சொத்துக்களும் நூதன வஸ்திராபரணங்களும், உலக பிரசித்தியும் உயர் பதவிகளும் ஏற்படும். மனம் சாந்தி அடையும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

ஷை கீலகஞூ மாசிமீ 5உ முதல் செவ்வாய் தன் வீட்டிற்கு விருச்சிக ராசியில் பிரவேசம் செய்கிறார். அவர் ஷை ராசியில் 6 மாதகாலம் ஸ்தம்பகதியாக வக்ரித்துக்கொண்டு சஞ்சாரம் செய்யப்போகிறார். அதற்கு குஜஸ்தம்பம் என்று பெயர். பிறகு செவ்வாய் விருச்சிகத்தில் இருப்பதற்குள்ளேயே சித்திரைமீ 16உ சனியும் மேஷராசிக்குப் பிரவேசம் செய்து சனி, செவ்வாய் இருவரும் ஏகாதிபத்திய ராசியான மேஷ விருச்சிகத்தில் சஞ்சாரம் நடக்கும். மறு வருஷத்தில் செவ்வாய்க்கு ஆதிபத்தியமே கிடையாது. வருஷ பிரவேசமும் சித்திரைமீ 1உ ஞாயிற்றுக்கிழமை பகல் 3ம் ஜாமத்தில் வருஷ பிரவேசமும் ஏற்படுகிறது. பருவமழை தவக்கப்படாமல் நிறைய பெய்யும்பொருட்டு வைதீகமாயும் தெய்வீகமாயுள்ள பர்ஜன்ய சாந்தியும் ருத்ரஹோமாபிஷேகமும் பிருத்வீ சாந்தியும், அன்ன பூர்ணஹோமமும் அர்ச்சனாதிகளும் உலகம் செய்துவந்தால் சுபிக்ஷமாகி விலைவாசிகள் இறங்கி உத்பாதங்கள் அனுகாமலும், அமைதியாகவும், உலகத்தை இருக்கச்செய்து கடவுள் முன்னின்று காப்பார். நாடெங்கும் செழிக்க கேடொன்றுமில்லை என்னும் பழமொழி பலிதமாகும். சுபமுண்டாகும்.